
# செய்திக் கதிர்

சித்திரை




ச்சதீவு
முடிந்த பிரச்சனையும்
முடிவு பெறுத
சிக்கல்களும்





தமிழீழ விடுதலைப்புலிகளின்
மட்டக்களப்பு பிராந்தியப்
பொறுப்பாளர்
'குமரப்பா'வுடன்
ஒரு உரையாடல்

பாலசிங்கம் சொல்கிறர்....

விலை 3·25

செய்தி விமர்சனத் தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி

எமது மண்ணின் எதிர்காலத்தின்

அத்திவாரம்....

இந்த மண்ணின் கல்வி வளர்ச்சியில்
நற்பணியாற்றி மாணவ சமூகத்தின்
நம்பிக்கைக்குரியவர்களாகத் திகழ்பவர்கள்

★ "நியூ மாஸ்ரர் இன்ஸ்ரியூட் நிறுவனத்தினர்" ★

க. பொ. த (உயர்தரம்) 1988- 1989
வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.
புதிய வகுப்புகள் ஆரம்பமாகவும் உள்ளன
வகுப்புகளுக்கான உங்கள்
இடங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

♣ நியூ மாஸ்ரர் இன்ஸ்ரியூட் ♣

B- M- C வீதி
யாழ்ப்பாணம்

புதிய வகுப்புகள் புதிய இடத்தில்
ஆரம்பமாகியுள்ளன....

நியூ மாஸ்ரர் இன்ஸ்ரியூட்
241, நாவலர் வீதி,
[புகையிரதக் கடவை அருகில்]
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக்கதிர்

இருவார செய்தி விமர்சனத் தொகுப்பு

சித்திரை | 1987

வைகாசி

அலுவலக முகவரி

140, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி
22437

- தவிர்க்க முடியாத நிலைமைகள்
- இவ்விதழும் தாமதமாகவே வருகிறது.
- மன்னிக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையது.
- இனிவரும் இதழ்கள் ஒவ்வொரு தமிழ் மாதமும் 1 ம், 15 ம் திகதிகளில் தவறாது வெளியிட முயற்சிக்கிறோம்.
- நன்றி.

— ஆ—ர்

## கடந்த மாத நிகழ்வுகள்

1- 04- 1987

காங்கேசன்துறையில் ஆயுதப் படையினரின் தாக்குதலால் ஆலயங்கள்- பாடசாலைகள், கடைகள் சேதம்-மக்கள் வங்கி கிளை உடைக்கப்பட்டது.

2 மயிலிட்டியில் செல்வராசா என்ற மனநோயாளி ராணுவத்தால் எரிக்கப்பட்டார்.

3 வல்லையில் அம்புலன்ஸ் வண்டி மீது ஹெலி குண்டு வீச்சு. நோயாளர் நால்வருடன் சாரதியும் தீக்கிரை.

திடீர் அதிரடி தாக்குதலின் பின் புலிகளின் கட்டுப்பாட்டில் மயிலியதனை இராணுவ முகாம்; ஆயுதங்கள் கைப்பற்றப்படல். பல இராணுவத்தினர் பலி. 10 புலிகள் வீரமரணம்.

4 ஆனையிறவிலும் மன்னாரிலும் படையினருடன் புலிகள் சமர். சிப்பாய்கள் இருவர் பலி. பலர் காயம்.

5 பூநகரி கடற்கரை மார்க்கமாக மூவாயிரத்துக்கும் அதிகமான துருப்புக்கள் யாழ்ப்பாணத்துக்குள் நகர முயற்சி.

6 புனானை முகாமிலிருந்து நேற்று முன்தினம் வெலிக்கந்த முகாமிற்கு, கமாண்டோக்கள் சென்ற மூன்று வாகனங்கள்மீது புலிகள் கண்ணிவெடி நடாத்தினர் 5 இராணுவம் பலி. நவீன ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டன.

7 வல்வை முகாமிலிருந்து ''ஷெல்'' தாக்குதல் வயிற்றில் இருந்த சிசு உட்பட 5 பேர் பலி 20க்கு- மேல் வீடுகள் சேதம்.

8 புலிகளால் சிறை பிடிக்கப்பட்ட சிப்பாய்களை வெளிநாட்டு நிருபர்கள் சந்தித்தனர்.

9- கோப்பாய்ப் பாலம் அருகில் தரையிறங்க ஹெலியில் வந்த படையினரை எதிர்த்துப் புலிகள் கடும் சமர்! போராளிகள் மூவர் வீர மரணம். பொதுமக்கள் சிலர் காயம்.

10 மட்டக்களப்பு புலிபாய்ந்தகல் பகுதியில் படையினர் சுட்டுப் 13 பொதுமக்கள் பலி.

★ ★

இலங்கைப் பிரச்சனை சம்பந்தமாக கிருஷ்ண ஐயர் தலைமையில் இலங்கைவர இருந்த நல்லெண்ணத் தூதுக்குழுவுக்கு விஸா வழங்க இலங்கைத் தூதுவராலயம் மறுப்பு.

★ ★

11 தமிழ்ப் போராளிகள் மீதான தாக்குதல்களைப் 10 நாட்கள் நிறுத்த அரசு முடிவு.

12 போர் நிறுத்தம் வந்த ஒரு மணி நேரத்துள் போர் நிறுத்தம் மீறல், இருதரப்பும் பரஸ்பரம் புகார். புல்லுவெட்ட வந்த சிப்பாய்களைப் புலிகள் சுட்டதாக அரசு புகார்.

13 யாழ் கோட்டைக்குள் சிப்பாய்க்கலகம். இராணுவ அதிகாரி சுட்டுக்கொலை. நாலு சிப்பாய்கள் காயம்.

★ ★

வெலிக்கடை உண்ணாவிரதிகள் மூவர் மயக்கம். ஜனாதிபதியின் சடித்தத்தைச் செயல்படுத்தும் வரை உண்ணாவிரதம் தொடரும்என அறிவிப்பு.

★ ★

14 ஆனையிறவில் இராணுவம் புலிகள் நேரடி மோதல், போராளிகள் இருவர் பலி.

15 தொண்டமானாறில் உலவந்த இராணுவம் கண்ணிவெடியில் சிக்கி மூவர் காயம்.

15. யுத்தக் கைதிகளை விடுவிக்க பெற்றோரும் பிக்குமாரும் அரசாங்கம்மீது நிர்ப்பந்தம்.

16 திருமலை ஒரு சிப்பாய் 3 சகபடையினரைக் கொன்று தானும் தற்கொலை செய்துகொண்டார்.

கண்டி பல்லேகல ராணுவ முகாமிலிருந்து ஆயுதமனையில் ஆயுதங்கள் கொள்ளை,

17 மன்னாரில் கண்ணி வெடிக்கு நான்கு இராணுவத்தினர் பலி.

பிரிட்டிஷ் கூலிப்படை இங்கு செயல்படுவதை பிரிட்டிஷ் அமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

18 திருமலை - ஹபரனை வீதியில் பஸ் லொறிப்பயணிகள் 107 பேர் கொலை செய்யப்பட்டனர்.

திருமலை மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு அமுல்.

தலைமன்னாரில் கண்ணிவெடிக்கு 9 இராணுவம் பலி.

19 வட, கிழக்கு பகுதிகளிலிருந்து லீவில் சென்ற இராணுவத்தினர் பலர் தலைமறைவு.

20 படைத்தலைவர்களுடன் ஜே ஆர். முக்கிய ஆலோசனை.

21 ஒட்டுசுட்டான் படைமுகாம் மீது ஈரோஸ் தாக்குதல்.

22 காங்கேசன் ஹாபர் வியூ மினிஇராணுவமுகாம் விடுதலைப் புலிகள் வசமானது? ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

கொழும்பு மத்திய பஸ் நிலையமருகில் வெடித்த குண்டால் 100க்கும் அதிகமானோர் பலி.

கொழும்பு, கம்பஹாமாவட்டங்களில் ஊரடங்கு இன்று விசேட அரச வங்கி வர்த்தக விடுமுறை.

24 யாழ் நகரில் முப்படைத் தாக்குதல்.

பதவியாவில் 18 இராணுவம் பலி.

25 யாழ்நகரில் 3வது நாளாக வானத்தாக்குதல்.

26 பிரதமரின் பேச்சுக்கு இந்தியா கடுங்கண்டனம்.


28 ஈழத் தமிழருக்கு தமிழக முதல்வர் 4 கோடி ரூபா நிவாரண உதவி.

நீர்வேலி, வசாவிளான், வல்வை பகுதிகளில்விமானத் தாக்குதல்.

29 பொதுத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால் நாடளாவிய கிளர்ச்சி நடக்கும் என சிறிமா எச்சரிக்கை.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏப்ரல் 24இல் ஸ்ரீலங்கா அரச படையின் பொம்பர் குண்டுக்குச் சிதைந்து போன மாட்டீன் வீதியில் உள்ள திரு. சிவ ராமியின் வீடு.



ஏப்ரல் 25இல் வீரமாகாளி அம்மன் கோவில் தேரின் சிற்பங்களில் பயங்கரவாதிகளைத் தேடிய பொம்பர் ஏற்படுத்திய விளைவு.



மார்ச் 23இல் யாழ். பொலிஸ் விடுதி இராணுவ முகாம் தாக்குதலில் வீரமரணம் அடைந்த அருண்.



23. 3 87 அன்று கோட்டை பொலிஸ் விடுதி இராணுவ முகாம் முற்றுகையின் போது சிறைப் பிடிக்கப்பட்ட சிப்பாய்கள்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் தரிசனங்கள்



ஏப்ரல் 16 இல் மண்மீட்புக்காக இதுவரை தமது இன்னுயிரைத் தியாகம் செய்த 509 தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு சுடரொளி ஏற்றிய தியாகச் சுடர் விழாக்காட்சிகள்.



ஏப்ரல் 22இல் காங்கேசன்துறை இராணுவ மினி முகாம்மீது விடுதலைப் புலிகள் முற்றுகையிட்டு கைப் பற்றிய பெருந்தொகையான ரவைகள்.



ஏப். 22 இல்வண்ணை வீரமா காளி அம்மன் ஆலயப்பகுதியில் பொம்பர் குண்டு வீசியபோது எதிர்த்தாக்குதல் நடவடிக் கையில் ஈடுபட்டிருந்த சமயம் வீரமரணமடைந்த தமிழீழ விடுதலைப் போராளி ஸ்கொட்



ஏப்ரல் 22 இல் மண் மீட் புக்காக உயிர்நீத்த வீர வேங்கை கப் டன் ஐயர்.




ஏப்ரல் 22இல் காங்கேசனில் இராணுவ மினி முகாம் மீது விடுதலைப் புலிகள் முற்றுகையிட்டபோது கைப் பற்றப்பட்ட பலரகமான ஆயுதங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏப்ரல் 25 இல் பாவப் பிறவிகளின் பாதகத்திற்காளான பச்சைக் குழந்தையும் ஒரு பயங்கரவாதியாம்?



ஏப்ரல் 25இல் இந்த நான்கு பேரின் 'விதியையும் ஒரே இடத்தில் ஒரே மாதிரி ஒரே சமயத்தில் நிகழ... எந்த இறைவன் எழுதி வைத்தானோ?



தமிழீழ விடுதலைப் 'புலிகளின் தலைவர் திரு வே.' பிரபாகரன் ஏப்ரல் 30ஆம் திகதி முதற்தடவையாக மேதினம் சம்பந்தமாக, நிதர்சனம் தொலைக்காட்சி சேவை மூலம் தமிழ் மக்களுக்கு உரையாற்றினர்.




ஏப்ரல் 25 இல் ஓர் ஏழையின் குடிசையும் பயங்கரவாதியின் முகாமாக மாறியதுவோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்புப் பிராந்திய பொறுப்பாளர் திரு குமரப்பாவுடன் ஒரு - உரையாடல்



தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்டத்தளபதி திரு. குமரப்பா விடுதலைப் புலி இயக்கத்தின் நீண்டகால உறுப்பினர். தமிழின ஒழிப்புப் போராட்டத்தில் ஸ்ரீலங்கா அரசின் ராணுவத்துக்குச் சிம்மசொப்பனமாக இருப்பவர். அவர் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக் கூடியவர். குமரப்பா பல சிரமங்கட்கு மத்தியில் எமக்குப் பேட்டிதர ஒப்புக்கொண்டார். தமிழ் - முஸ்லிம் இனஐக்கியத்திற்காக பெரும் முயற்சி எடுத்து வருபவர் ஆவார். அவரின் பேட்டியினைத் தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம். (ஆர்+ர்)

பேட்டிகண்டவர்
அதிசயன்

கே:- மட்டக்களப்பு மாவட்டத்தின் இன்றைய நிலையில் ஸ்ரீலங்கா ராணுவத்தின் நிலைப்பாட்டைப் பற்றிச் சொல்லுங்கள்?

ப:- யுத்த நிறுத்தத்தின் பின்பு ஸ்ரீலங்கா ராணுவம் தனது நிலையை மொசாட்டின் துணையுடன் நன்கு பலப்படுத்தியுள்ளது. யுத்த நிறுத்தத்தின் முன்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏழு இராணுவ முகாம்களே இருந்தன. ஆனால் இன்று அரசாங்கம் 50க்கு மேற்பட்ட முகாம்களை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்தாபித்துள்ளது. அதுமாத்திரம் அன்றி 'கினி மினி' க் கூலிப்படைகளால் பயிற்றுவிக்கப்பட்ட விசேட அதிரடிப்படைப் பொலிஸார் இந்த இடங்களில் காவலுக்கு நிறுத்தப்பட்டு உள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பிரதான வீதி ஒன்றுதான். இந்த 50க்கு மேற்பட்ட முகாம்களில் பெரும்பாலானவை மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான வீதிகளை ஆக்கிரமித்து, சராசரியாக 1 மைலுக்கு ஒரு முகாமாக அமைக்கப்பட்டுள்ளது. இது மொசாட்டுக்கள் வழிவகுத்துக் கொடுத்த தந்திரமே. கெரில்லாப் போரில் சில இடங்களில் கிட்டத்தட்ட ஒரு மைல் தூரத்தை நாம் ஊடுருவப் பல மணித்தியாலங்கள் எடுக்கின்றன. எனவேதான் யாழ்ப்பாண மாவட்டத்தின் நிலையை விட மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரச்சனைகளும் போராட்ட சூழ்நிலைகளும் கடுமையான வித்தியாசம் கொண்டவை.

நாம் சிங்கள இனவாதப் போராட்டத்தை முறியடித்து இப்போது இஸ்ரவேல் மொசாட்டின் தந்திரங்களை முறியடிப்பதற்காகவே போராடிக் கொண்டிருக்கின்றோம். இந்த மொசாட்டின் திட்டங்களில் வயதில் இளைஞர்களாகிய தமிழர்களை அழிப்பதே முக்கிய நோக்கம். அந்தப் படுகொலைகளை நாம் பல இடங்களில் முறியடித்து இருக்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்களைப் பட்டினிபோட்டுப் படுகொலை செய்யலாம் எனவும் அரசு யோசிக்கின்றது. நாம் நடமாடக் கூடிய இடங்களில் ஒருவர் ஒரு இறாத்தல் பாணுக்கு மேல் கொண்டு செல்ல முடியாது. அப்படி மேலதிகமாகக் கொண்டு சென்றால் அந்த இடத்தில் வைத்துச் சாப்பிடுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். கிரானின் உள்ளே இருக்கும் தீவெட்டை என்ற இடத்தில் இது அதிக தூரம் மேற்கொள்ளப்படுகின்றது. எமது உரிமைப் போராட்டத்தைப் பட்டினிபோட்டு முறியடிக்கலாம்என்பதே திட்டம்!

கே;- தமிழ்ஈழ விடுதலைப் புலிகளைவிட மற்ற இயக்கங்கள் இப்போது இல்லையா? ஈ. பி. ஆர்.எல். எப். பின் நிலைப்பாடு எப்படியிருக்கின்றது?

ப:- மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு இயக்கங்களும் இருந்தன என்பது உண்மையே! ஆனால் அவர்கள் செய்த செயல்களால் அவர்களை மக்கள் நிராகரித்தார்கள். இதனால் ஈரோஸ் தவிர்ந்த இயக்கங்கள் இயங்க விடாது தடைசெய்யப்பட்டன.

ஈ. பி. ஆர். எல். எவ். மட்டக்களப்பு மாவட்டத்தில் பாவற்கொடிச்சேனையில் முஸ்லீம் பெண்களைக் கற்பழித்தார்கள்; கீழ்த்தரமான முறையில் நடந்து கொண்டார்கள்; இதனால் இயக்கங்களைக் கட்டுப்படுத்தத் தமக்கு ஊர்காவல்படை தேவையென எண்ணத்தலைப்பட்டார்கள். ரெலோவைப் பொறுத்தமட்டில் காத்தான்குடியில் இருந்த புதிய சுப்பர் மார்க்கெட் அவர்களால்தான் எரிக்கப்பட்டது. எனவே தமிழ்மக்களின் ஒரு பகுதியினரான முஸ்லீம்களைப் புறக்கணித்து அவர்களை ஸ்ரீலங்கா அரசுடன் ஐக்கியப்படுத்தும் எந்த ஒழுக்கக் கட்டுப்பாடு அற்ற எந்த அமைப்பையும் நாம் இயங்கவிட முடியாது.

கடைசியாக ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தைப் பற்றிச் சில விடயங்கள் சொல்லப் போகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிக்காலத்தில் ஈ.பி. ஆர். எல். எப். இயக்கமும் முஸ்லிம் மக்களின் நலனைப் புறக்கணிக்கும் விதத்தில் நடந்து கொண்டது, விவசாய பூமியான அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொத்துவிலுக்கு வந்த ஓயில் பௌசர் தனிப்பட்ட ஒரு முஸ்லீமுக்குச் சொந்தமானது. அந்த பௌசரை அவர்கள் கடத்திச் சென்றுர்கள். இது கலவரத்தை உண்டுபண்ணும் என நாம் கருதியதால் அதனைத் திருப்பிக் கொடுக்குமாறு கோரினேம்.

ஆனல் இந்த பௌசர் எந்தச் சமயத்திலும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை.

இந்நிலையை வைத்து மீண்டும் எமக்கு ஊர்காவல் படை தேவையென முஸ்லீம்கள் கூறினர்கள். எனவே இங்கு நடந்த உட்கட்சிப் பிரச்சனைகட்கு மேலே காட்டிய விடயங்களும் காரணமாகும்.

**கொக்கட்டிச் சோலைப் படுகொலைகளின் போது புக்தி ஜீவிகளும், இளைஞர்களும், பயிற்றப்பட்ட தொழிலாளர்களும் திட்டமிடப்பட்ட முறையில் அழிக்கப்பட்டார்கள்!**

கே:- ஈ. பி. ஆர். எல். எப். பால் தமிழ்ஈழ விடுதலைப் புலிகட்கு கிழக்கு மாகாணத்தில் அதிக சேதம் உண்டெனக் கூறப்படுகின்றதே!

ப:- அது கொழும்புப் பத்திரிகைகள் கிளப்பிவிட்ட பெரிய புரளி. இந்த விஷயத்தில் எரிக்கரை பத்திரிகைகள் அரசுக்கு அதிக சேவை செய்துள்ள தார்மீக ரீதியில் பல ஈ. ஆர்- எல் எப் போராளிகளை நாம் விடுதலை செய்தோம் வடபகுதியிலும் பார்க்க ஈ. பி ஆர். எல். எப் போராளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் கிழக்கு மாகாணத்தில்தான் அதிகம். அதைவிட அதிரடிப்படையினரிடம் சரண் அடைந்த ஈ. பி. ஆர். எல்.எப். போராளிகள் இருபதுக்கு மேல் உண்டு. இவர்கட்குக் கொமாண்டோ உடுப்புக்கள் போடப்பட்டுப் புலிகளை அழிக்கும் செயல்பாட்டிற்குப் புதிய திட்டங்கள் தயார்படுத்தப்பட்டுள்ளன அதிரடிப்படையினருடனை நேரடித் தொடர்பு வசதி ஈ. பி ஆர் -எல். எப் க்கு உண்டு.

கே:- ஊர்காவல் படையினரின் நிலை இப்போது என்ன மாதிரி இருக்கின்றது?

ப: தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மீது கொண்டுள்ள நம்பிக்கையால் முஸ்லீம் மக்கள் தமக்கு ஊர்காவல் படை வேண்டாம் எனச் சொல்லிவிட்டார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊர்காவல் படையைக் கொண்டு வந்த பெருமை றிஸ்வி சின்ன லெப்பைக்கே உரியது. இவர் அத்துலத்முதலியின் கையாள் ஓட்டமாவடி, மீராவோடை, வாழைச்சேனையில் இருந்த முஸ்லீம் மக்கள் தமக்கு ஊர்காவல் படையே வேண்டாம் எனச் சொல்லி விட்டார்கள். றிஸ்வி சின்னலெப்பை பதூர்டீன் என்ற பழைய கிறிமினலைத் தலைவராகக் கொண்டு ஊர்காவல் படையை அமைத்தார்கள்.

இவர்கள் கப்பம் பெற்றுர்கள். பலாத்காரம் செய்தார்கள். காத்தான்குடியில் இவர்கள் கொடூரம் அதிகரித்தது. இதனல் ஆரையம்பதியில் உள்ள தமிழ்மக்கள் காத்தான் குடிக்கு செல்வதைத்தவிர்த்துக் கொண்டார்கள் இதனல் முஸ்லீம் மக்களின் வியாபாரத்தில் வீழ்ச்சியும் ஏற்பட்டது.

எனவே முஸ்லீம் மக்களும்தமிழ் மக்களும் ஏகோபித்த குரலில் இவர்களை அழிக்கச் சொன்ஞர்கள், எனவேதான் இவர்களை நாம் அழித்தோம்

கே:- கொக்கட்டிச்சோலை நேரடி மோதல் பற்றிச் சொல்லுங்கள்:-

ப:- இந்த மோதல் 3 நாள் இடம் பெற்றது. மொசாட் தந்திரங்கள் மூலம் கெரில்லாத் தளங்களை அழிப்பதற்கு அரசு முயல்கின்றது. இந்த நேரடிமோதலில் 45 இராணுவத்தினர் உயிரிழந்தார்கள். மும்முனைத் தாக்குதல் இடம்பெற்றது. எமது தரப்பில் செந்தூரன் என்ற போராளி உயிரிழந்தார். 3 பேர் காயமடைந்தனர். சில கெரில்லாத் தந்திரங்களைப் பாவித்து 3 நாட்களின் பின்பு எமது நிலையில் இருந்து நாம் பின்வாங்கினேம். அதே சமயத்தில் இராணுவததினரின் L. 3MMG, M 16A2 மோட்டர்கள் என்பனவற்றை நாம் கைப்பற்றினேம்.

கே:- படுகொலைகள் பற்றி...?

ப:- 150 பேருக்கு மேற்பட்ட பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிருர்கள்.

கே:- இறால் பதனிடும் தொழிற்சாலை சேதப் படுத்தப்பட்டு அங்குள்ள தொழிலாளர்களை அழித்தது பற்றி...?

ப:- அது மிக முக்கியமான விஷயம், இது திட்டமிடப்பட்ட சதி. இறால் வளர்ப்பில் மிக முக்கியமான இலக்கு இலங்கையில் கொக்கட்டிச்சோலைதான்! இத் தொழிற்சாலை தமிழ் ஈழத்துக்கு மிக முக்கியமான பொருளாதார இலக்காகத் திகழும் என அரசு கருதியது. இத்தொழிற்சாலையில் வேலை செய்யும் அத்தனை திறமைபெற்ற தொழிலாளர்களையும் அழித்துவிட்டால் இத் தொழிலையே அழித்துவிடலாம் என அரசு கருதுகின்றது. எனவே தான் முகாமையாளர் கருணாகரஉட்பட இங்குள்ள திறமைபெற்ற தொழிலாளர்கள் பலரும் படுகொலை செய்யப்படடார்கள்.

**இராணுவர் இங்கு ஆஸ்பத்திரிக்குச் 'ஷெல்'' அடித்துப் படுகொலை செய்கின்றது. மட்டக்களப்பில் சில ஆஸ்பத்திரிகள் இராணுவ முகாமாக மாறி விட்டது மகிழடித்தீவு திருக்கோயில் ஆகிய ஆஸ்பத்திரிகளில் இராணுவம் முகாமிட்டுள்ளது.**

இப்பகுதியில் இருந்த டாக்டர் கந்தையா, அவரின் மகன் ஆகியோரும் படுகொலை செய்யப்பட்டவர்களில் அடங்கும்.

கே:- இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் எத்தனை பேர் பூஸாவிலும், வெலிக்கடையிலும் உள்ளார்கள்?

ப:-3000 இளைஞர்கள் இன்று சிறையில் இருக்கிருர்கள்.

கே:- இராணுவம் வெற்றியடைந்து உள்ளதா?

ப:- இராணுவம் வெற்றியடைந்து விட்டது என்றால் தமிழ் மக்களை அழிப்பதில் மொசாட் வெற்றியடைந்து விட்டது என்பதுதான் அர்த்தம். அவ்வாறு சாத்தியமாகும் நிலை ஏற்பட இடம் இல்லை.

ஆனல் இன்று முஸ்லீம் மக்கள் நாம் எடுக்கும் அரசியல் முடிவை ஏற்கத் தயாராக இருக்கிருர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே:- ஆலயங்களுக்கும் சமீப காலங்களில் சேதங்கள் ஏற்பட்டுள்ளதா?

ப:- ஆம்... முறக்கொட்டாஞ்சேனை, அம்பிலாந்துறை ஆகிய இடங்களில் இருந்த ஆலயங்கள் கடுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ளன. புகழ்பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீஸ்வரர் ஆலயத்திற்கும் சேதமேற்பட்டுள்ளது.

கே:- இராணுவம் ஆஸ்பத்திரிகளில் முகாம் அமைக்கின்றதாமே...?

மகிழடித்தீவு, திருக்கோயில் ஆகிய ஆஸ்பத்திரிகளில் இராணுவம் முகாமிட்டு உள்ளது.

கே:- இராணுவம் நடந்து கொள்ளும் முறைபற்றி ..!

ப:- சமீபத்தில் முறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை பொட்டம்மான் என்பவரின் தம்பி எனச் சொல்லிக்கொண்டு படுகொலை செய்தார்கள். பின்பு அவரை ஒரு தடியிலே கட்டி ராணுவம் தோளிலே சுமந்து சென்றது அவ்வாறு செல்லும்போது ராணுவத்தினர் 'பொட்டம்மான் தம்பியைச் சுட்டுக்கொண்டு போகிறோம்; இறைச்சி கிலோ 2 ரூபா எனக் கூக்குரல் இட்டது. இதைப்போன்ற அநாகரிகமான வேலைகளில் இராணுவம் ஈடுபட்டு வருகின்றது.

★

ஈ. பி ஆர் எல். எப். போராளிகள் இருபது பேர் அதிரடிப்படையினரிடம் சரண் அடைந்து உள்ளனர் அதன் ஓர் அங்கமாகவே செயற்பட்டு வருகிறார்கள். கொமாண்டோ உடைகள் போடப்பட்டு இவர்கள் போராளிகளை ஒழிக்கப் பயன்படுத்தப் படுகின்றனர்.

கே:- முஸ்லீம் மக்களைப் பொறுத்தமட்டில் விடுதலைப் புலிகளுக்கும் கூட்டணிக்கும் இடையில் கொள்கை முரண்பாடுகள் உண்டா?

ப:- அதிகம் உண்டு. தமிழர்விடுதலைக்கூட்டணியினர் முஸ்லீம் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கவில்லை. ஆனால் விடுதலைப் புலிகள் அவர்களைத் தனி ஒரு தேசிய இனமாக அங்கீகரித்து உள்ளார்கள்.

மட்டக்களப்புத் தொகுதியில் இரட்டை அங்கத்துவம் உண்டு. இதில் ஒரு முஸ்லீம் எம். பி.யைத் தெரிவு செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இந்த இரட்டை அங்கத்துவம் ஒதுக்கப்பட்டது. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒருபோதும் முஸ்லீம் ஒருவர் இத்தொகுதியில் எம். பி. ஆவதற்குரிய வேட்பாளரை இங்கு நியமிக்கவில்லை. தமது உட்கட்சிப் பூசலைத்தீர்ப்பதற்காக ஒரேயடியாகக் காசி ஆனந்தனையும் இராசதுரையினையும் வேட்பாளர்களாக நியமித்த கட்டமும் மட்டக்களப்பில் அரங்கேறியது. இது ஒரு வெட்கங்கெட்ட நிலையாகும்.

அரசியல் லாபங்களுக்காகத் தமிழ், முஸ்லீம் பூசல்களை இவர்கள் கிளப்பினார்கள் என்பதை மறுக்க முடியாது.

முஸ்லீம் மக்களிடையே வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்போது அவர்களின் சுதந்திர வேட்கை கல்விப் பின்னணி, தியாகம் என்பனவற்றைக் கூட்டணி ஆராயவில்லை. பணபலம், ஆட்பலம் ஆகியவற்றைக் கணக்கிட்டே முஸ்லீம் வேட்பாளர்களைத் தெரிவு செய்தார்கள். இதனால் அவர்கள் தேர்தலில் வென்றதும் கட்சி மாறினார்கள். இது அவர்கள் பிழையென்பதை விடத் தேர்வில் விட்ட பிழையென்றே கூறல் வேண்டும் 1977ஆம் ஆண்டு மட்டக்களப்பில் திரு. மதி அமிர்தலிங்கம், முஸ்லீம் வேட்பாளர்களைப் பார்த்து முன்பு ஒன்றாக வந்தவர்கள் ஒன்றாகப் போய் விட்டார்கள்; நீங்களும் போய்விடுவீர்களா எனக் கேட்டார்! இவைகள் எல்லாம் முரண்பாட்டைக் கூட்டணி கட்டி எழுப்பிய விதத்தையே காட்டுகின்றது.

காத்தான்குடிப் பகுதி அதிக நெருக்கமான குடிசனத்தைக் கொண்ட பகுதியாகும். இப்பகுதி முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டது. இப்பகுதி குடிசனம் அதிகமாக உள்ள பகுதியாக மாறவே தமது ஊருக்கு அருகே கர்பலா என்றொரு கிராமத்தை உருவாக்கினார்கள். இக்கிராமம் உருவாகுவதற்கு எதிராகத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஆரையம்பதியில் உள்ள தமிழ் மக்களைத் தூண்டி விட்டனர்.

அதே சமயத்தில் புன்னக்குடாவில் சிங்கள மக்கள் குடியேறியபோது அதனை எதிர்த்து இவர்களால் அதுவுமே செய்யமுடியாது போய்விட்டது.

●

இறால் குஞ்சு வளர்ப்புப் பற்றிய விபரங்கள் மட்டக்களப்பு மக்களுக்குத் தெரிய விடப்படாது என்பதற்காகவே இறால் வளர்ப்பு நிலையம் நீர்கொழும்பில் அமைக்கப்பட்டது.

ஆனால் இறால்களை அதிகம் வளர்த்து வெற்றியீட்டக் கூடிய இடம் மட்டக்களப்பே என "புருஸ் கயர்" என்ற ஆய்வாளர் கூறியுள்ளார்.

●

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்களே பெரும்பான்மையினர். கடந்த மாவட்டசபைத் தேர்தலில் தமிழர் ஒருவரை வேட்பாளராக நிறுத்தாமல் முஸ்லீம் ஒருவரை வேட்பாளராக இவர்களால் நிறுத்தியிருக்க முடியும். ஆனால் அவர்கள் அதைச் செய்யாது திரு. வேல்முருகையே தமது வேட்பாளராக நியமனம் செய்தார்கள். எவ்வகையில் பார்த்தாலும் தமிழ் மக்களை அன்னியப் படுத்தும் ஒரு செயலையே தமிழர் கூட்டணி செய்து வந்திருக்கின்றது. அழிப்புதில் மொசாட் வெற்றியடைந்து விட்டது என்பதுதான் அர்த்தம். அவ்வாறு சாத்தியமாகும்நிலை ஏற்பட இடமில்லை.

○

முறக்கொட்டாஞ்சேனை அம்பிலாந்துறை. ஆகிய இடங்களில் இருந்த கோயில்களும் புகழ்பெற்ற கொக்கட்டிச் சோலை தான் தோன்றி ஈஸ்வரர் ஆலயமும் இராணுவத்தால் சேதமாக்கப்பட்டுள்ளது.

○

கே:- இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில் யாழ்ப்பாணத்துக்கும், மட்டக்களப்புக்கும் இடையில் என்ன வித்தியாசத்தைக் காண்கின்றீர்கள்?

ப:- யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில்மொசாட் இராணுவத்துறையில் அவர்களுக்குப் புத்தி சொல்லிக் கொடுப்பதற்கு முன்பே அவர்களை நாம் முகாமில் சிறைப்படுத்தினோம். இதனை அவர்களால் மீற முடியவில்லை. மட்டக்களப்பைப் பொறுத்த மட்டில் கிட்டத்தட்ட 3 மைல்களுக்கு ஒன்றாகப் போடப்பட்ட இராணுவ முகாம்கள் திட்டமிடப்பட்டுத் தமிழர்களை ஒழிப்பதற்காகப் போடப்பட்டவை. சில சமயங்களில் 1 மைலைக்கூட ஊடுருவிச் செல்வதற்கு எமக்குப் பல மணிநேரம் எடுக்கும் பரந்துபட்ட வயல்வெளிகள். இடையிடை சில மரங்கள் ஒரு கெரில்லாப் போராளிக்குச் சாதகமான இலக்குகள் மிகவும் குறைவு. எனவே யாழ்ப்பாணத்தின் சூழ்நிலைகளுடன் ஒருபோதும் மட்டக்களப்பு ராணுவச் சூழ்நிலைகளை ஒப்பிடக் கூடாது! இவ்வாறு இருந்தும் ஸ்ரீலங்கா ராணுவத்தின் செயற்பாடுகளை நாம் முறியடிக்கின்றோமென்றால் மாபெரும் சாதனை என்பதை மறந்துவிடக்கூடாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரஸ்பர சமாதானத்தின் அடிப்படையில் தமிழர்களின் பிரச்சனையைத் தீர்க்கும் எண்ணம் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அரசாங்கத்துக்குக் கிடையாது. தமிழ் மக்களின் குரல்வளையை இறுக்கிப் பிடித்து நிபந்தனைகட்குச் சரணாகதி அடையச் செய்வதுதான் ஜே. ஆரின் நோக்கம்.

இன்று தமிழ் மக்களுடன் பேரம்பேசும் ஒரு சக்தியை உண்டுபண்ணுவது புலிகளின் ராணுவ வல்லமையே! எனவே தமிழீழ விடுதலைப் புலிகளை முறியடித்து விட்டால் இலங்கை அரசாங்கம் தான் விரும்பிய வண்ணம் தீர்வு ஒன்றினை திணிக்கலாம் என அரசு கருதுகின்றது.

புலிகள் சிவில் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று சுதந்திரப் பிரகடனம் செய்யலாம். அதைத் தடுப்பதற்காகவே பொருளாதாரத்தடை போடப்பட்டுள்ளது என இலங்கை அரசாங்கம் வாதாடுகின்றது.



'இந்து' பத்திரிகைக்கு விடுதலைப் புலிகளின் பேச்சாளர் திரு. அன்ரன் பாலசிங்கம் அளித்த 'பேட்டி'யில் இருந்து சில கருத்துக்களை இங்கே தருகிறோம்.

ஆனால் அது அல்ல உண்மை. புலிகளுக்கு ஆதரவு வழங்காதீர் என மக்களை எச்சரிக்கவும், தென்னிலங்கைப் பொருளாதாரத்தில்தான் தமிழ் மக்கள் தங்கியிருக்கிறார்கள் என்பதை உணர்த்தவுமே இது நடத்தப்படுகின்றது.

★ ★ ★

யாழ்ப்பாண மக்களும் இலங்கைப் பிரசைகள் தான் எனக்கூறும் இவ் வெட்கம்கெட்ட அரசு செய்து வரும் இச்செய்கை தமிழ் மக்களின்பால் உலகின் பரிந்துணர்வை ஈட்டிக் கொடுத்துள்ளது.

இலங்கை அரசாங்கம் செய்த பொருளாதாரத் தடையால் பல தீய விளைவுகள் ஏற்பட்டு உள்ளன. தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையே உண்டான விரிசல் மிக அதிகமாகி விட்டது. தமிழ் மக்களின் சுகவாழ்வில் அரசுக்கு அக்கறை இல்லையென்பதையும் தமிழினப் படுகொலையே அரசின் நோக்கம் என்பதையும் இத்தடை நிரூபித்து உள்ளது.

கொக்கட்டிச்சோலையில் எம்மிலும் பார்க்க அதிக தொகையான படைகளுடன் புலிகள் மோதி, 50 கொமாண்டோக்கள் உயிர் இழந்தனர். எம்மிலும் பார்க்க எண்ணிக்கையில் அதிகமான படையை வெல்வதற்கு நாம் எமது நிலைப்பாட்டை மாற்றியமைத்துப் பின்வாங்கினோம். நான்கு நாட்களாக நடந்த யுத்தத்தில் விடுதலைப் புலிகள் ஒருவர்கூட மரணிக்கவில்லை. கடைசியில் தமது ஆத்திரத்துக்குப் பொது மக்களே அதிகளவில் பலியெடுக்கப்பட்டு உள்ளனர்.

இலங்கையின் வடக்கு நோக்கி எண்ணாயிரம் துருப்புக்கள் யாழ்ப்பாணம் நோக்கி வரத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்தப் படைகள் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மும்முனைகளிலுமிருந்து வந்தனர்.

# புலிகளின் பேச்சாளர் பாலசிங்கம் பேசுகின்றார்!

இவர்களை எதிர்க்கவேண்டிய புலிகள் இவர்களைத் திசை திருப்பும் கெரில்லா முறை ஒன்றினைக் கையாண்டனர். இதனால் இராணுவம் எதிர்பார்த்து வந்த தாக்குதல் நகைப்புக்கிடமாக மாறியது. இது ஏமாற்றமாகப் போய்விட்டது.

★ ★ ★

இவ்வாறு பெரும் தொகையாக வந்த இராணுவத்தினர் வழி நெடுகிலும் பொதுமக்களை நையப்புடைத்தனர். மன்னார், கிளிநொச்சியில் கிறீஸ்தவ, இந்துக் கோயில்களில் இருந்த பலர் படுகொலை செய்யப்பட்டார்கள். சில நாட்களில் இவர்கள் பரந்தன் பட்டினத்தை அடைந்தனர். உண்மையாகச் சொல்வதாயின் ஒரு அந்நியப் பிராந்தியக் கெரில்லாத் தளத்தில் இவர்கள் இருப்பதையே இது நினைவு ஊட்டும்! விடுதலைப் புலிகள் இவர்களைத் தாக்குவார்களாயின் கட்டாந்தரையில் நிலைகொண்டுள்ள தாராக்களின் கதியே இவர்கட்கு ஏற்படும்.

★ ★ ★

பெப்ரவரி பதினைந்தாம் திகதியன்று யாழ். டச்சுக்கோட்டை, நாவற்குழி, பலாலி, காங்கேசன்துறை வல்வெட்டித்துறை முதலாம் ராணுவ முகாம்களிலிருந்து தொடர்ச்சியான பீரங்கி, ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்தன. பெருந்தொகையானோர் இறந்தும், காயமடைந்தும் உள்ளனர்.

★ ★ ★

பலாலி ராணுவ முகாமை விட்டு வெளிவந்த இராணுவம் புலிகளின் கெரில்லாக்களுடன் 48 மணி நேரம் மோதினர். மல்லாகம், கட்டுவன், தெல்லிப்பளை ஆகிய கிராமங்கள் மீதும் ''ஷெல்'' பீரங்கித் தாக்குதல்கள் தொடர்ந்தன.

நன்றி:- இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடைபவன்

யாழ்ப்பாணத்தான் பற்றி எப்போதுமே எழுதிக்
கொண்டிருக்கலாம்போல. கடந்தமுறையும் அதுபற்றி
எழுதினேன். இப்போதும் எழுதுகிறேன்.

சில நாட்கள் முன்பாக யாழ்ப்பாணத்தின் புற
நகர்ப் பகுதியில் போர்விமானங்கள் அதிகாலையிலேயே
யுத்தபேரிகை முழங்கின. மக்களின் குடியிருப்புகள்மீது
'ஷெல்' மழை பொழிந்தன.

தனது வீட்டிலிருந்த அப்பாவிப் பெண் ஒருவர்
கொல்லப்பட்டார். பலர் காயங்களுக்குள்ளாகினர்.
'புதினம்' பார்க்க எமது சனங்கள் கூடிவிட்டனர்.
என்ன நடந்தது, எங்கே ஷெல் வீழ்ந்தது. என்ப
தைப் பார்க்க எல்லோருக்கும் ஆவல்தான்.

மக்களுக்குச் சேவைசெய்யும் இரு இளைஞர்கள்
அந்த ஷெல் தாக்குதலில் சிறுகாயங்களுக்கு ஆளா
ஞர்கள். என்ன பரிதாபம்... அவர்களைக் கொண்டு
சென்று சிகிச்சையளிக்க அருகில் வைத்தியசாலை
இல்லை. யாராவது அவர்களை ஏற்றிக்கொண்டு செல்
வார்களா என்று எதிர்பார்த்தால், ஏமாற்றமே மிஞ்சி
யது. ஏதோ ஒருவாறாக அந்த இளைஞர்களின் நண்
பர்கள் சனத்தை விலக்கிக் காயமடைந்தோரை வைத்
தியசாலைக்குக் கொண்டுசென்றனர்.

இதைச் சொல்கிறபோது மாலை நேரமொன்றில்
நகரைக் கலங்கவைத்த ஷெல் தாக்குதலில் காய
மடைந்தோரை, உயிரிழந்தோரை வாகனங்களில்
ஏற்றி வைத்தியசாலைக்கு அனுப்பிய இளைஞர்களுக்கும்,
கடமையே கண்ணாக சிகிச்சை செய்த வைத்தியசாலை
ஊழியர்கட்கும் எப்படி நன்றி சொல்வது? இவர்களும்
யாழ்ப்பாணத்தவர்தான், புரிகிறதா? குழம்புகிறதா?

## சித்தன்

அண்மைக் காலங்களில் இலங்கையில் முக்கிய
மாக வடக்கில் அநேக நூல்கள் வெளியாகியுள்ளன.
இந்த மாதிரியான வேகம்(?) முன்னெப்போதும் ஈழத்து
இலக்கிய உலகில் காணப்படவில்லை.

இதற்கெல்லாம் காரணம் என்னவென்று சரியா
கத் தெரியவில்லை. சிலகாலம் முன்பாக இலக்கியச்
சர்ச்சைகள் திடீரென வேகம் கொண்டன. அடிப்
படையில் இலக்கியக் கொள்கைகள் (கொள்ளைகள்
அல்ல) தொடர்பாகப் பல சர்ச்சைகள் நடந்தன. பல
இலக்கிய வித்துவான்களும் இதில் கலந்து கொண்டிருந்
தனர்.

இலக்கியச் சர்ச்சைகளில் ஒரு நல்ல அம்சம், இத
னால் இலக்கியக் கொள்கைகளின் சரியான தளம் கண்டு
பிடிக்கப்பட வாய்ப்புண்டு. ஆனால் இப்போது சர்ச்
சையும் இல்லை, சந்தடியும் இல்லை. வெளியீடுகள்தான்
அதிகம்.

இவ்வாறான வெளியீடுகளால் எழுத்தாளர்கள்
ஊக்குவிக்கப்படுவது ஒருபுறமிருக்க, வாசகர்களுக்கும்
புதிய படைப்புகள் பலவற்றைச் சேமிக்கவும் வாய்ப்
புண்டாகிறது. இந்தியாவைப் போன்ற பிரசுர வசதி
இங்கில்லாமலே ஊக்கமோடு உழைக்கும் இந்தச் சிறு
கூட்டத்தினரை அரசு ஊக்குவிக்க வேண்டுமென்று
எதிர்பார்க்கமுடியாது. நாமேதான் இயன்றவரை
ஒரு பிரதியையாவது வாங்கி உதவவேண்டும்.
எத்தனைபேர் முன்வரப் போகிறீர்கள்? ஒரு ஆயிரம்
பேர்...? போதுமே.

☐ ☐ ☐

அதியுத்தமர், இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தன
பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து
உரையாற்றுவது வழக்கம் பிரிட்டனிலிருந்து பாராளு
மன்ற முறையைக் கடன்வாங்கிய இலங்கை இந்தப்
பாரம்பரியத்தையும் சேர்த்தே வாங்கியிருக்கிறது.

உலகிலுள்ள நாட்டுத் தலைவர்களில் மூத்த தலைவர்
வர்களில் எமது ஜனாதிபதியும் ஒருவர்(!) பொதுச்
சேவையில் ஐம்பத்தைந்து வயதுக்குமேல் யாரும்
இருக்கமுடியாது அப்படியே இருப்பதானாலும். வெகு
சிரமப்பட்டு (காணவேண்டியவர்களைக் கண்டு) ஒருவரு
டம் அல்லது இருவருடங்கள் இருக்கலாம். மறந்தும்
ஐந்து வருடங்கள் விடமாட்டார்கள். அரசியலில் மட்
டும் ஏன் இப்படி நடைமுறையொன்றும் இல்லாமல்
'உங்கள் சேவை நாட்டுக்குத் தேவை' என்று சிம்மா
சனத்தில் உட்காரவைத்து மக்களின் கழுத்தை அறுக்
கிறார்கள்?

'அரசபடைகள் தமிழ்மக்கள் மீது தாக்குதல் நடத்
தவில்லை. இனிமேலும் அவ்வாறான தாக்குதல் நடத்
தப்படமாட்டாது' என அதியுத்தமர் தனது 'சிம்மா
சனப் பிரசங்கத்'தில் கூறியிருக்கிறார். ஏற்கனவே 'உண்
மை'களை அறிவதற்கு 'லங்காபுவத்' ஆற்றிவரும்
அளப்பரிய சேவையோடு நாட்டின், மக்களின் தலைவர்
ஜயவர்த்தன தனது பங்களிப்பையும் வழங்க விருப்பம்
தெரிவித்திருக்கிறார். 'லங்காபுவத்' தினசரி வெளியிடும்
உண்மை (நகைச்சுவைத் துணுக்கு)கள் உள்ள தரத்
தைவிட இந்த உரை உயர்தரமாயுள்ளதோடு பாராளு
மன்றப் பதிவேட்டிலும் பதியப்பட்டுள்ளது. இன்ன
பிற காரணங்களைக் கருதி ஜனாதிபதி அவர்கள் தமது
பதவியிலிருந்து விலகி 'லங்காபுவத்'துடன் இணைந்து
அது நாட்டு மக்களுக்கு ஆற்றிவரும் அளப்பரிய
சேவையை மேலும் செழிப்புறச் செய்யவேண்டுமென்
பது என் விருப்பம்.

☐ ☐ ☐

இலங்கையில் எந்தத் துறையிலும் தமக்கு அறி
முகமானவர்கள் தெரிந்தவர்களையே புகுத்துவது மேல
திகாரிகளின் வழக்கம். இந்தத் துரதிர்ஷ்டத்தாலேயே
நாடு பெருமளவில் சீரழிந்து கொண்டிருக்கிறது.

ரூபவாகினியில் தமிழில் செய்தி வாசிக்கிறவர்களைப்
பார்த்தாலும் இந்த அபிப்பிராயமே எழுகிறது. எங்கே
தான் இவர்களைத் தேடிப்பிடித்தார்களோ என்று
யோசிக்கவேண்டியிருக்கிறது. அண்மையில் இந்தியத்
தொலைக்காட்சியில் செய்தி வாசித்த ஒருவரைப் பார்
த்தபிறகே இந்த எரிச்சல் மேலும் கூடியது.

இந்த நிலையில் 'டூயட்' செய்திகள் வேறு கழுத்தை
அறுக்கின்றன. யார் வாசிக்க வேண்டிய செய்தி என்
பது கமராக்காரருக்குத் தெரியாமலிருக்கிறது. சமயத்
தில் ஆளை மாற்றிக் காட்ட அவர் மறுபுறம் திரும்பி
மூக்கைச் சொறிவதும், கைகளால் நாட்டியமாடுவ
தும்... சகிப்பது உங்கள் பொறுமையைப் பொறுத்தது
தமிழுக்கும், தமிழனுக்கும் எத்தனை விதங்களில்
சோதனை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு

## முடிந்த பிரச்சனையில் முடிவு பெறாத சிக்கல்கள். இந்தியா என்ன செய்யும்?

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அமைந்திருக்கும் கச்சதீவு சமீபகாலங்களில் அரசியல் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீவாக விளங்குகிறது.

பாக்குத் தொடுகடல் (பாக்குநீரிணை) குமரிமுனைக்குத் தெற்கே அமைந்துள்ள பாம்பனுக்கும் யாழ்ப்பாணத்தின் வடகடல் ஓரமாக அமைந்திருக்கும் நெடுந்தீவுக்கும் இடையே உள்ள தீவு கச்சதீவு. இத்தீவின் தோற்றப்பாட்டின் அளவு ஒரு மைல் நீளம்; 900 அடி அகலம். மொத்தம் 3. 75 சதுர மைல் பரப்பளவு கொண்ட சிறுதீவு கச்சதீவு. கற்பாறைகளும், சிறு கடற்குன்றுகளும் கச்சதீவுக் கரையைச் சுற்றி இருக்கின்றன. கற்றாழையும், முட்புதர்களும் இத்தீவின் இயற்கைத் தாவர அமைப்பு.


சேதுபதி இராமநாதபுர ஜில்லாவை ஆட்சி செய்த காலத்தில் இராமநாதபுர வாசிகள் கச்சதீவிலிருந்து வைத்தியத்திற்குப் பயன்தருப் 'உமிரி' என்ற மூலிகையை மரக்கலங்களில் ஏற்றி வருவதுண்டு. உமிரி மாறுத வியாதிகளுக்கு ஓர் சர்வரோக நிவாரணி என்று மக்கள் நம்பினார்கள். சாயவேர் என்ற ஒருவகை வேரும் இத்தீவில் உண்டு. மீன்பிடித் தளமாகவும், முத்துக்குளிக்கும் துறையாகவும் ஒரு காலத்தில் இத்தீவு விளங்கியது. இந்திய - வடபகுதி மீனவர்கள் பலநாட்கள் தங்கியிருந்து மீன்வளம் மிக்க இத்தீவின் சுற்றாடலில் மீன்பிடிப்பது வழக்கம். இங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் புனித அந்தோனியாரைத் தரிசிக்க தமிழகத்திலும், யாழ்ப்பாணத்திலும், நீர்கொழும்பிலும், சிலாபத்திலுமிருந்து கத்தோலிக்கரும், இந்துக்களும் உற்சவ காலங்களில் போவது சகஜம். கச்சதீவு கடத்தல் மையமாகவும் பயன்பட்ட காலமுண்டு. இன்று ஸ்ரீலங்கா அரசின் கூலிப்படைகள் கச்சதீவுக் கடலில் நிலைகொண்டு நிற்கின்றன.

★ ★

பல தந்திரங்களைக் கையாண்டு சுமார் இருநூறு வருஷம் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியாவையும் இலங்கையையும் ஆண்டுவந்தார்கள். கரையோரத் தீவுகளும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அதிகார எல்லைக்குட்பட்டன. ஆயினும், இரண்டாம் உலக யுத்த காலத்தில் கச்சதீவின் இராணுவ முக்கியத்துவம் உணரப்பட்டது. பிரிட்டிஷ்கடற்படை குண்டுகளை வெடிக்க வைக்கும் பரிசோதனை முயற்சிக்கு கச்சதீவு பயன்பட்டது, சமகாலத்தில் ஏகாந்தமான இயற்கைச் சூழலில் மூன்று கடல்கள் சங்கமிக்கும் இடத்தில் அமைந்த இத்தீவில் பிரிட்டிஷ் கடற்படை உயர் அதிகாரிகள் உல்லாசமாக தமது பொழுதைப் போக்கினார்கள். அரேபியாவில் இருந்து தருவிக்கப்பட்ட சதுரிகளின் நடனமும், கேளிக்கைகளும், உயர் அதிகாரிகளின் காமக் களியாட்டங்கள் நடைபெறும் இடமாக 2-வது உலக யுத்த காலத்தில் கச்சதீவு திகழ்ந்தது.

### இந்தியாவின் கச்சதீவும்

இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் இந்தியத் தீபகற்பத்தின் கடலாதிக்கத்துக்குள் இருந்த தீவுகளைப் பற்றியும், எல்லையிலுள்ள தீவுகளைப் பற்றியும் அவற்றின் பயன் பொருத்தத்தைப் பற்றியும் அறியாமல் இருந்தது. 1955 ஆம் ஆண்டு சிங்கள அரசு முன்னறிவித்தல் எதுவுமின்றி கச்சதீவைத் தனது கடற்படைக்கு பயிற்சி அளிக்கும் தீவாகத் தேர்ந்து எடுத்தது. இந்தியா இப்போதுதான் ஓடிவிளித்தது. இந்நிலையிலும் கூட கச்சதீவைப் பற்றிய விவரங்களை இந்திய அரசு முற்றாக அறிந்திருக்கவில்லை. இந்திய நாடாளுமன்றத்தில் பண்டிதர் நேரு, "போதிய செய்திகள் இந்த விவகாரம் பற்றி இந்திய அரசிற்கு இல்லை" என்று கூறியிருக்கிறார் **(Lok Sabha Debates - 1956)** ஆனால், கொழும்பில் இருந்து வெளியாகும் ஏரிக்கரைப் பத்திரிகைகள் கச்சதீவுப் பிரச்சனையை விஸ்வரூபமாக்கின. ஆனால், நேரு "இந்தியாவின் தன்மானம் இந்தப் பிரச்சனையில் கலக்கவில்லை. அதுவும் குறிப்பாக பக்கத்து நாடான இலங்கையுடன்" என்று சிறிதும் தயங்காமல் கூறினார். பல ராஜரீகப் பேச்சு




வார்த்தைகளின் பின் 1974 ஜூலையில் இரு பகுதியினருக்குமிடையிலான ஒப்பந்தத்தின் பிரகாரம் கச்சதீவு இலங்கையின் இறையாதிக்கத்துக்குள் வந்தது. இந்த ஒப்பந்தம் தொடர்பான இந்திய அரசின் கொள்கைக்கு தமிழ்நாட்டில் கணிசமான எதிர்ப்பு இருந்தது. அன்றைய தி. மு. க. அரசும் தன் கண்டனத்தைத் தெரிவிக்கத் தவறவில்லை.

அன்றைய நிலையில் சில அரசியற் காரணங்களைக் கருதியும் இந்தியா கச்சதீவை வழங்கியிருக்கலாம். சர்வதேச அரசியல் அரங்கில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா காலத்திலிருந்து இலங்கை அரசு நவீன காலனியாதிக்கத்திற்கெதிராக இந்தியாவுடன் ஒத்துழைத்ததின் தொடர்பான விளைவு கச்சதீவை இந்தியா விட்டுக்கொடுத்ததின் காரணங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் ஒன்ருக இருக்கலாம். ஆனல், சர்வதேச அரசியலில் இப்போதைய ஸ்ரீலங்கா அரசின் நெறிபிறழ்வும், இந்தியக் கடல் ஆதிக்கப் பிரதேசத்தில் அமெரிக்காவின் தலையீடும் அதிகரித்து வரும் இன்றைய நிலையில் கச்சதீவு குறித்து இந்தியா கவலையடைந்துள்ளது.

கச்சதீவை இலங்கை 'ஆட்சி எடுத்த' (உரிமை கொண்டாடிய) முறையே அலாதியானது. 1974 ஜூலையில் கச்சதீவு தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. 23, 8. 74 அன்று கச்சதீவில் தென் இந்தியாவில் இருந்தும் இலங்கையிலிருந்தும் புனித அந்தோனியார் திருநாளுக்காக யாத்திரிகர்கள் கூடியிருந்தனர். திடீரென்று கச்சதீவில் புகுந்த சிங்கள ராணுவம் வெறியாடியது. இதற்கு இந்திய மத்திய அரசு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. வாய்மூடி மௌனியாக இருந்துவிட்டது.

**கச்சதீவின் இராணுவ- பெருளாதார முக்கியத்துவம்**

1. பாக்கு நீரிணை,மன்னர் வளைகுடா கடற்படைத்தளம் அமையும்போது, அதன் முக்கிய மையங்களில் ஒன்ருகக் கச்சதீவு அமையலாம்.

2. ஐரோப்பிய இந்தோனீசியத் தீவுகளில் அமைக்கப்படும் ஏவுகணைத் தளங்களின் இலக்குகளுக்கு எதிரான ஏவுகணைத் தளங்களைக் கச்சதீவில் கட்டலாம்.

3. அணுவாயுதத் தளம் அமைப்பதற்கு உகந்தது. இந்தியாவிற்குத் தெற்கே 1500 மைல்களுக்கு அப்பால் இருக்கும் டிகோ கார்சியா தீவைப்போல் கச்சதீவிலும் அணுவாயுதத் தளம் ஒன்று எதிர்காலத்தில் அமையலாம்.

4. கடற்படைக் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் நங்கூரமிடவும் பழுதுபார்க்கவும் ஏற்ற தளம் அமைக்கக்கூடிய இடம்.

5. போர்ச் செய்தித் தொடர்பு நிலையம், ராடர் போன்ற கருவிகள் பொருத்த உகந்த இடம்.

6. கடலில் சமிக்ஞைக் கருவிகள், மிதவைகள் (Deeb Water Mooring Buoys) ஆகியவற்றின் கேந்திர நிலையமாகவும் பயன்படுத்தலாம்.

7. இந்து சமுத்திரத்தில் வான்வெளிப் பிராந்தியத்தைப் பாதுகாக்க வேண்டிய கருவிகளைப் பொருத்தலாம்.

8. தென்கிழக்காசியப் பகுதிகளில் ஐரோப்பியத் தளங்களை எதிர்த்துப் போராடும் விடுதலைப் படையினருக்கு கெரில்லாத் தாக்குதலை கடலில் நடத்துவதற்கும் பொருத்தமான இடம். வியட்நாமின் புரட்சித் தலைவர் ஹோசிமின் கெரில்லாத் தாக்குதல்களுக்கு கடலோரத் தீவுகளைப் பெரிதும் நம்பினர். அத்தகைய தீவுகளில் கச்சதீவு முக்கியமானது.

9. கச்சதீவுக் கடலின் கீழ் கனியவளம் பயன்படுத்தப்படலாம்.

10. கடல் உணவு வகைகள் ஆராய்ச்சி நிறுவனம் அமைப்பதற்குப் பொருத்தமான இடம்.

11. உல்லாசப் பயணிகள் பொழுதுபோக்கிற்கு உகந்த இடம்.

**அமெரிக்காவும் கச்சதீவும்**

அமெரிக்கா இன்றைய போக்கில் தன் நட்சத்திரப் போர்த் திட்டத்தில் நேட்டோ நாடுகள் அல்லாமல், தெற்காசியாவில் பாகிஸ்தான், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளையும் தன் கைக்குள் போட்டுள்ளது. இந்தியக் கடல், வங்காள விரிகுடா, அரபியக் கடல்களுக்கு மையமாகவும், ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, மத்தியகிழக்காசியா, தெற்காசியா ஆகிய நாடுகளுக்கு நடுவில் பூகோள ரீதியாக இலங்கை அமைந்துள்ளது. இதனல் ஸ்ரீலங்காவை தன் மூழ்காத போர்க் கப்பலாக (Unsinkable Warship) அமெரிக்கா கருதுகிறது. ஸ்ரீலங்கா, அமெரிக்காவின் 7 -வது கடற்படை அளவிற்கு இராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது. சோவியத் ரஷ்யாவின் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளைத் தடுத்து அழித்துவிடக்கூடிய ஏவுகணைகளை அமைப்பதற்கு ஸ்ரீலங்காவை தனது தளமாக மாற்றிக்கொள்ள அமெரிக்கா விரும்புகிறது. இந்த வகையில் அமெரிக்கா முன்னேற்றமும் கண்டுள்ளது. அப்படி அமையும் பட்சத்தில் கச்சதீவு டிகோ கார்சியாவைப் போல் கேந்திர முக்கியத்துவம் பொருந்திய தீவாக செயற்கையாக மாற்றப்படும். செயற்கை அரண்களை அமைத்து தீவுகளை உயர்த்தி Atlantis City of Gold, Grand Copri Requblic அமெரிக்க கடற்கரையோரத்தில் உருவாக்கியதுபோல் கச்சதீவும் கடற்படை - இராணுவ முஸ்தீபுகளுக்காக விஸ்தரிக்கப்படலாம்.

**சிறிய தீவுகளின் பயன்பாடுகள்**

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக கடலின்டையே இருக்கும் சிறு தீவுகள், பெரும் கடற்பாறைகள் இராணுவ - பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாக வல்லரசுகள் கருதுகின்றன. பொருளாதார வகையில் சிறுதீவுகளை 'கடலில் பூத்த பொன் மலர்கள்' என்றும், இராணுவ முறையில் 'மூழ்காத போர்க் கப்பல்கள்' என்றும் வர்ணிக்கப்படுகின்றன. இதன் நிமித்தம் வியட்னுமின் பாரசெல் தீவுகளை கம்யூனிஸ்ட் சீன பறித்துக்கொண்டது. பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் மின்கொயர்ஸ் - எக்ரௌ (Minquires and Ecrehou) தீவு குறித்துப் போரே நடந்தது. அமெரிக்க நாட்டிற்கும் நெதர்லாந்துக்கும் பால்மஸ்தீவு குறித்துப் பெரும் அரசியல் பிரச்சனையே எழுந்தது. டென்மார்க்கிற்கும் நோர்வே நாட்டிற்கும் கிழக்கு கிரீன்லாந்து குறித்து இழுபறி ஏற்பட்டது.

பாக்நீர்ச் சந்தியில் - கச்சதீவில் அதி உத்தம ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் உதவியுடன் அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதன் கையாட்களும் தளம் அமைத்து இந்திய கடற்பகுதியை வளைத்துக் கொள்ளாத வகையில் பாதுகாப்பது இந்தியாவின் வரலாற்றுக் கடமையாகும். இதற்குக் காலம்தான் பதில் சொல்லும்.

## இஞ்ஜினியர் அரபாத்



முகம்மத் அபெட் அரோஸ் என்ற இயற் பெயரைக் கொண்டவரே அரபாத் என்ற பெயரால் அழைக்கப்படும் பாலஸ்தீனிய விடுதலைத் தலைவர். ஜெருசலேம் நகரில் பிறந்த அரபாத் கெய்ரோவில் தனது படிப்பைத் தொடர்ந்தார்.

அரபாத்தினை பலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவராகப் பலருக்கும் தெரியுமே தவிர அவர் ஒரு இஞ்ஜினியர் என்று பலருக்கும் தெரியாது. அவர் கெய்ரோவில் படிக்கும் போது இஞ்ஜினியரிங் துறையிலே தனது மேற்படிப்பை முடித்துக் கொண்டார். 1956-ல் அவர் கெய்ரோவில் இஞ்ஜினியராக வேலை செய்தார்.

பலஸ்தீனிய விடுதலைத்தலைவர் 1974-ம் ஆண்டில் ஐ. நா. வில் பேசிய பேச்சு பலராலும் புகழ்ந்துரைக்கப் படுகின்றது. 1975-ம் ஆண்டில் உலக சமாதானப் பரிசு, உலக சமாதானக் கவுன்சிலால் அரபாத்திற்கே வழங்கப்பட்டது.

அரபாத்தின் தற்போதைய விலாசம் ஒ்சதாத் வீதி, ராஸ் பேரூட், லெபனன்.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரிலும் உலகிலும்

கொழும்பில் மருதானைச் சந்தியில் நின்றிருந்தேன். ஆமர் வீதிக்குச் சென்று கொண்டிருந்த அந்த பஸ்சினை நான் வழிமறித்தபோது என்னை முந்திக்கொண்டு 7 வயது மதிக்கத்தக்க இரு சிறுவர்கள் தமது பிச்சாபாத்திரங்களுடன் ஏறி முன்சீட்டில் அமர்ந்து கொண்டனர். அவர்கள் ஒசியில் பிரயாணம் செய்யப் பார்க்கிறார்களாக்கும் என நான் ஒருகணம் நினைத்தேன், ஆனால் உண்மையல்ல. அவர்கள் தமது பேணியில் இருந்து சரியான கட்டணத்தைக் கண்டக்டரிடம் கொடுத்தார்கள். ஆமர் வீதியில் இறங்கி அவர்கள் நடந்தார்கள். நானும் இறங்கி அவர்களைப் பின் தொடர்ந்தேன். இந்த நேரத்தில் ஆமர் வீதியில் மருதானையை விட அதிக சனக்கூட்டம் இருக்குமாம்! பிச்சை அதிகம் சேரும் எனப் பின்புதான் தெரியவந்தது. இந்தச் சிறுவர்களைக்கடந்து கொட்டாஞ்சேனை மகாவித்தியாலயத்தில் படிக்கும் சில மாணவர்கள் நவீன பாணியில் உடைஅணிந்து சென்று கொண்டிருந்தார்கள். அப்போது அந்த இரு பக்கச் சிறுவர்களையும் எண்ணிப் பார்த்தேன். பணக்காரர்கள் பணக்காரர்களாகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பிள்ளைகள் கஷ்டம் இன்றி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஏழைகளின் பிள்ளைகள் பிச்சை எடுக்கும் கோலத்தில் திரிந்து கொண்டிருக்கிறார்கள்.

★ ★ ★

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு நண்பனைச் சந்தித்தேன். எப்படியிருக்கு கிழக்கு மாகாணம் என்று கேட்டேன். அதை ஏன் பேசிறீங்க... வடக்கில எரிபொருள் தடை, பொருளாதாரத் தடை போல அங்கையும் சில இடங்களில் இருக்கு என்றார்.

நான் ஆச்சரியத்துடன் அவரை நோக்கினேன். அவர் சொன்னார். ''இப்போது அரசாங்கம் முஸ்லீம் தேங்காய் வியாபாரிகட்கு ஒரு எச்சரிக்கை விட்டிருக்கு. அதாவது தமிழ் ஆட்களுக்கு ஒரு ஆளுக்கு 5 தேங்காய்க்கு மேல விற்கக் கூடாது என்பதுதான் அந்தச் சட்டம்''. தேங்காய் வியாபாரம் செய்யக் கூடத் தமிழனுக்குத் தரப்படுத்தல்! இப்பிடியொரு தடை நிறவெறி பிடித்த தென்னாபிரிக்காவில் கூட இருக்குமோ என்பது சந்தேகம்தான்!

இது தர்மிஷ்ட அரசின் பயங்கரவாதத் தடைச் சட்ட 'சப் செக்ஷன்' தேங்காய்த்தடை.

★ ★ ★

பெரியாஸ்பத்திரியை ஒரு முறை சுற்றிப்பார்த்து விடலாம் என்று வெளிக்கிளம்பினேன். முதலில் நோயாளர் நலன் புரிச்சங்கத்திற்குச் சென்று 7-ம் திகதி நடந்த ''ஷெல்'' அடி ஏதாவது பாடங்களைக் கற்றுத் தந்திருக்கிறதா எனக் கேட்டு வைத்தேன். சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காத கூட்டங்கள்தான் இவர்கள் என்ற பூர்வ பீடிகையுடன் அந்த உத்தியோகத்தர் தொடங்கினார். ''ஷெல்'' காயத்தால் காயமடைந்து ரத்தம் அதிகம் வெளியேறிய அந்த நோயாளர்கட்கு, கட்டிலைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த சொந்தக்காரர்கள் எவரும் ரத்தம் வழங்கவில்லை.

திடீரெனக் குருநகரில் இருந்து வந்த வாலிபர்கள் பலர் ரத்தம் வழங்கி அந்த நோயாளர்களைக் காப்பாற்றினர் என்றால் இந்த ரத்த உரித்துக்காரர்களை எப்படி அழைப்பதோ?

ராஜா தியேட்டரடியில் விழுந்த பயங்கர ஷெல்களால் பலர் இறந்தனர். ஆனால் குற்றுயிராக அன்று கிடந்த பல பரிதாபமானவர்களும் (காப்பாற்றப்படக் கூடியவர்களும்) இறந்தது மிகவும் விசனிக்கத்தக்கது. எமது மக்கள் பயப்பட்டது ஒரு புறம் இருக்கலாம். மறுபுறத்தில் முதலுதவியாவது இவர்கட்குச் சரியான முறையில் செய்யத் தெரியவில்லையே என்று வெட்கமே ஏற்பட்டது. ''ஷெல்'' அடியால் விழுந்து இறந்தவர்கட்கு மேல் உயிருக்காகப் போராடியவர்களை மேலே போட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்தார்கள். கை முறிந்து கிடந்தவர்களின் கைகளைப் பவுத்திரமாகப் பிடிக்காமல் சிலர் பிடித்தார்கள். முறிந்த கை அப்படியே சிலருக்கு வெளியே வந்து விட்டது. இது போன்ற சந்தர்ப்பங்களில் எமது மக்களை நாமே காப்பாற்ற நாம் தாதியாகவேண்டும் முதலுதவியை எல்லோரும் நன்கு படித்து வைத்திருக்க வேண்டும். இனியாவது இதனை நாம் சீரியஸாகக் கற்போமா?

★ ★ ★

யாழ்நகர மக்களின் குடிநீர்க் குறையினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் மினிக் குடிநீர்த் திட்டங்கள் சிலவற்றை நிறைவேற்றத் திட்டமிட்டு இவற்றைச் செயல் படுத்த யாழ். மாநகர சபை நிதி ஒதுக்கியது.

யாழ்ப்பாண மாநகரசபை குடிநீர்க் கிணறுகள் உள்ள ஐமூனு வீதி, கச்சேரி நல்லூர் வீதி போன்ற திட்டங்களை அக்கறையுடன் செய்து முடித்துவிட்டது. ஆனால் நகரின் பின்தங்கிய நகரசுத்தித் தொழிலாளர் வதியும் திட்டி (திருநகர்)ப் பகுதியில் அமைக்கப்பட வேண்டிய நீர் விநியோகத் திட்டம் இன்னும் ஆரம்பிக்கப்படவே இல்லை. 1988-ம் ஆண்டுடன் யூனிசெப் திட்டம் மேற்படி திட்டங்கட்கு நிதி உதவி வழங்க இருப்பதாக அறியப் படுகிறது. அதற்குள் முடியாவிடின் சென்ற வருடம் இதற்கென ஒதுக்கப்பட்ட பணம் திரும்பச் சென்றுவிடும். திட்டி மக்களின் விஷயத்தில் அதிகாரிகள் விழிப்புடன் செயற்பட வேண்டும் சமீபத்தில் திருநகருக்குப் போனபோது திட்டம் தொடங்........?

★ ★ ★

தெரியுமா சங்கதி? யப்பான் நீதிமன்றம் ஒன்றில் நடைபெற்ற கற்பழிப்பு வழக்கில் எதிரிக்கு 3 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

செய்த பிழைக்குத்தானே தண்டனை அனுபவித்தான்;

சரிதான்!

ஆனால் இந்த வழக்கில் சாட்சி யார் தெரியுமா?

அது ஒரு பொலிஸ் நாய்தான்!

...சரிதான் வாசகரே உடம்பு ஒரே அலுப்பாயிருக்கிறது. அடுத்த கிழமை சந்திப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திபெத்திய

## பௌத்தமதத் தலைவர்

# தலாய்லாமா

## கூறும் அரசியற் கருத்துக்கள்



கே:- பௌத்த மதநாடான இலங்கையில் தொடர்ச்சியான வன் செயல்கள் இடம் பெறுவதை நீங்கள் விரும்புகின்றீர்களா?

ப:- இது துரதிர்ஷ்டமானது. ஆனால் இலங்கையைப் பொறுத்தமட்டில் மதம் மக்களைப் பிரிப்பதற்குப் பிழையான முறையில் பயன் படுத்தப்பட்டிருக்கின்றது: இதனால்தான் பெரும்பாலான பிரச்சனைகள் முளைத்து எழும்பின.

கே:- பௌத்த மதத்தை வாழ்வியலில் கடைப்பிடிப்பவர் என்ற முறையினிலும், பௌத்த மதத்தின் மரபுவழித் தலைவர் என்ற முறையிலும் இப்படுகொலைகளை நிற்பாட்டுவதற்கு உங்கள் பங்களிப்பை அளிப்பதற்கு நீங்கள் எப்போதாவது சிந்திக்கவில்லையா?

ப;- இதனை நிற்பாட்டுவதற்கு நான் மிகவும் ஆவலாக உள்ளேன். இது சம்பந்தமாக நான் சில முயற்சிகளைச் செய்யாமலும் இல்லை. இவ்விடயமாக எனது சார்பில் ஒரு தூதுக்குழுவினை அனுப்புவதற்கும் நான் ஆவலாக உள்ளேன்.

கே-; உங்கள் பதிலைச் சற்று விபரமாகச் சொல்ல முடியுமா? உங்கள் முயற்சியைக் கூட விசாரித்துச் சொல்ல முடியுமா? ஸ்ரீலங்காவிற்கோ. அல்லதுஇந்தியாவிற்கோ உங்களது நிலையை இந்த விஷயத்தில் விளங்கப்படுத்தி நீங்கள் ஏதாவது செய்தி அனுப்பியிருக்கிறீர்களா? இவ்விடயத்தில் இலங்கையில் இருக்கும் புத்தகுருமார் யாருடனாவது நீங்கள் தொடர்பு கொண்டது உண்டா?

ப;- நன்று இரண்டு தடவைகள் இந்நிலையைக் கண்டித்து நான் அறிக்கை வெளியிட்டு உள்ளேன். முக மறிந்த பல நண்பர்கட்கு இந்நிலையை நிற்பாட்டுமாறு பல செய்திகளையும் நான் அனுப்பி வைத்துள்ளேன்.

கே:- உங்கள் மதத்தலைவர்கள் யாராவது ஸ்ரீலங்காவிற்கு இது சம்பந்தமாக விஜயம் செய்துள்ளார்களா?

ப:- எனக்குத் தெரியாது. (சிரிப்பு)

கே:- உங்களுக்கு ஸ்ரீலங்காவிற்குச் சென்று நிலைமையை நேரில் அறிய விருப்பம்தானே...?

ப:- ஆனால் ஸ்ரீலங்கா அரசு மறைமுகமான வழிகளில் தடைகள் போடும் என்று நினைக்கின்றேன்.

கே:- அப்படியென்றால் ஸ்ரீலங்கா அரசு உங்களுக்கு விசா தரமாட்டார்கள் என எண்ணுகின்றீர்களா?

ப:- நான் அப்படி நினைக்கவில்லை. ஆனால் என்னை அழைப்பதில் அவர்கட்குச் சில இடைஞ்சல்கள் இருக்கின்றன.

கே :- நீங்கள் விரைவில் திபெத் போய்விடப்போவதாகச் சொல்கின்றீர்களே?

அது உண்மைதானா?

ப:- 1983ஆம் ஆண்டில் எனது மக்களின் நிலைமை பற்றி அறிய நான் அங்கு செல்ல இருந்தது உண்மைதான். ஆனால் இன்றைய நிலையோ மிக வேகமாக மாற்றமடைந்து விட்டது. இப்பொழுது மதரீதியாக அவர்கட்குச் சில சுதந்திரங்கள் கிடைத்து இருப்பதை அறிகின்றேன். இந்நிலையில் இன்று நான் திபெத்துக்கு விஜயம் செய்வதை விரும்பவில்லை.

கே:- திபெத்தின் இறைமையைப்பற்றி...?

> சமீபத்தில் திபெத்திய மதத்தலைவர் வண. தலாய்லாமா கல்கத்தாவுக்கு வந்திருந்தார். இவரை ரூசூர் பண்டிற் என்ற பத்திரிகையாளர் இலங்கை, சீன-இந்தியப் பிரச்சனைகள் பற்றிப் பேட்டி கண்டார். இக்கேள்விகட்குத் தலாய்லாமா அளித்த பதில்கள் கீழே இடம்பெற்றுள்ளன.

ப:- இப்போது சீனா திபெத்தை ஆக்கிரமித்து வைத்துள்ளது. எனவே சீனாவில் என்ன நடக்கின்றதோ அது திபெத்தையும் பாதித்துக் கொண்டே இருக்கின்றது. ஆனால் சீனாவில் இன்று இருக்கும் நிலைமை நாளை இருக்குமோ என்பது சந்தேகத்துக்கு உரிய ஒன்று தான்! எனது நண்பர்கள் பலர் சீனாவின் இன்றைய நிலைபரத்தை நன்கு அறிந்து வைத்திருக்கின்றார்கள். இதனால் சீனாவில் ஆட்சி நாளை இராணுவத்தின் கீழ் வீழ்ச்சியடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வாறு வரும் ஆட்சி இன்றைய அரசு செய்வதைத்தான் தொடர்ந்து கடைப்பிடிக்கும் எனச் சொல்வதற்கில்லை. எனவே இன்னும் சில வருடங்களின் பின்பு தாய்நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் நிலைமை பற்றி யோசிக்கப்படும்.

கே:- சீனா திபெத்திற்குள் நுழைந்ததன் பின்புஇந்திய நாட்டுக்குச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறதா?

ப:- நிச்சயமாக! இந்த விஷயத்தில் இந்தியா சரியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. திபெத் நாடு இந்தியாவின் வட எல்லையில் இந்தியாவுடன் உரிமையுள்ள நாடு. அன்று அந்த வட எல்லையில் பாதுகாப்பின் நிமித்தம் ஒரு இந்தியப் போர்வீரர் கூடச் சேவையில் இருக்க வில்லை ஆனால் சீனாவின் இந்த நிலைப்பாட்டின் பின்பு ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் இவ்வாறு நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு உள்ளது.

கே:- திபெத்தில் ஆக்கிரமிப்பை ரஷ்யா - ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்புப்பற்றியும் வியட்னாம் - கம்பூச்சியாவில் ஊடுருவியதையும் ஒப்பிட்டுக் கொள்ளலாமா?

ப:- இல்லை. இந்த இரண்டு நிலைகளும் ஒன்றுக்கு ஒன்று வித்தியாசமானவை ஆப்கானிஸ்தானியரும், கம்பூச்சியாவிலும் ஒரு சிறு குழுவினர் முறையே ரஷ்சியாவினதும் வியட்னாமியரதும் வருகையை வரவேற்றார்கள். ஆனால் திபெத்தைப் பொறுத்தமட்டில் எந்தவொரு திபெத் குடிமகனும் சீனாவை வரவேற்கவில்லை.

கே:- உங்களுக்குப் பின்பு ஒரு தலாய்லாமா உருவாகுவாரா?

ப:- அது சந்தர்ப்பங்களைப் பொறுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்ப் பொருளாதாரம்

**போர்** என்பது தொழிற்சாலையின் பேரொலியில் அல்ல; மனிதனின் சிறிய மூளையில்தான் உருவாக்கப்படுகிறது. கொள்கை வேறுபாடுகளாலும், எல்லைப் பூசல்களாலும் உண்டாகின்ற இக்காலப் போர்கள், போரினுல் பாதிக்கப்படுபவர்களுக்கு மட்டுமல்லாது போரினை ஆரம்பிப்பவர்களுக்கும் தலைவேதனையாக உள்ளது. போரில் ஈடுபட்டுள்ள நாடு எவ்வகையிலாவது பொருள் திரட்டி தன்னுடைய எதிரியை வெல்லல் வேண்டும். இன்று எமது பிரதேசத்தில் நடைபெறும் பிரகடனப்படுத்தாப் போருக்கு எவ்வழிகளில் பொருள் திரட்டிக் கொள்ளலாம் என நோக்குவோம்.

சாமுவல்சன் (Samuelson) எனும் அறிஞர் போர்பற்றி குறிப்பிடுகையில் நாம் தங்கத்தால் போரிடமுடியாது. எதிரிக்கு காகிதப் பணத்தை எறிந்து அவனை அழிக்கமுடியாது. ஆனல் அதற்கு பதிலாக ஆயுதங்களே அவசியம் என்றூர். எதிரியினுடைய வழியைத் தடுத்து உணவு முதலியவை செல்லாது தடுக்கவும் வேண்டும். எனவே இவை எல்லாவற்றிற்கும் தேவைப்படுவது பணமேயாகும். ஒருநாடு போரில் ஈடுபட்டுவிட்டது எனின் அது தன்னுடைய முழுநாட்டின் மொத்த ஆக்கத்தையும் (Gross National Product) பயன்படுத்தி எதிரியை முறியடிக்க வேண்டும்.

எமது பிரதேசத்தை பொறுத்தவரையில் போருக்கு பொருள் திரட்டுதல் அவ்வளவு எளிதாக இல்லை. பொருளாதாரத்தை பொறுத்தமட்டில் ஏழ்மை நிலையில் இருக்கும் நாம் எதிரிக்கு எதிராக போர்தொடுப்பதில் பிரச்சனைகள் இருக்கத்தான் செய்கிறது. எனினும் பொருள்வளம் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ போருக்காக ஒதுக்கப்பட்டு வருகிறது. 'சிலரின்' கோரிக்கைகள் பொதுமக்களிடம் ஏற்படுத்திய மாற்றங்களை நாம் கண்கூடாக காண்கின்றோம்.

நாடு போரில் முழு மூச்சாக இறங்கியபின் மற்ற வைகளைப்பற்றிக் கவலைப்படுவதால் பயனில்லை. தற்காலப் போர் பொருட் பெருக்கத்தின் அடிப்படையிலேயே நடக்கின்றது. ஆயுதங்கள் வாங்கப் பொருள் தேவைப்படுகிறது. மக்கள் தங்கள் நுகர்வைக் குறைப்பதன்மூலம், பொருளாதாரத்தை சாதகமாக்குவதன் மூலம் போருக்குப் பொருள் திரட்ட முடியும். 1939-ல் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் பேசிய நிதியமைச்சர் ஜோண் சைமன் (John Simon) "போருக்கு முக்கியமான கால்களில் ஒன்று நிதியாகும். இது இல்லாது விடின் நம்முடைய முழுப் போர் முயற்சியும் வீணுகிவிடும்" எனக் குறிப்பிட்டார்.

போருக்கு பொருள் திரட்டலுக்கு முக்கிய அம்சமாகத் திகழ்வது வரியாகும். மக்களின் செழிப்பைப் பொறுத்தும், அவர்தம் நாட்டுப்பற்றைப் பொறுத்தும் இது நிர்ணயிக்கப்படல் வேண்டும். வருமான வரி (Income Tax), இலாப வரி (Profit Tax) இவைகள் நல்ல வருவாயைத் தரலாம். வரி விதித்தல் போருக்குப் பொருள் திரட்டும் வழியாக மட்டுமல்லாது பண வீக்கத்தையும் தடுக்கும் முறையாகவும் உள்ளது. இதைத் தவிர, கட்டாயமில்லாத காணிக்கை என்ற ஓர் முறையும் உண்டு. இது நாட்டு மக்களின் தேசப் பற்றுக்கும், தியாகத்திற்கும் அறிகுறியாகும்.

எந்நேரமும் மோதல் நிகழக்கூடிய இன்றைய நிலையில் பாதுகாப்புத் தொகையை எவ்வாறு பல்வேறு தேவைகளுக்குப் பங்கீடு செய்யலாம் எனவும் தீர்மானித்தல் அவசியம். போர்ச் செலவுகளை முன்னரே கணிக்க முடியாததாகையால் இராணுவப் பொருளாதாரத் தேவைகளை வைத்துக்கொண்டு ஓர் சிறந்த பாதுகாப்புக் கொள்கையை (Defence Policy) உருவாக்கல் அவசியம்.

> நிதியம் திரட்டுவதை விட அதைப் பங்கிடுவது தான் மிகக் கடினமானதொன்ருகும். சுயமாக ஆயுதங்களை உற்பத்தி செய்தல், பொறியியல் தொழில் நுட்பங்களுக்கு முக்கியத்துவம் அளித்தல், விவசாயப் பொருட்களின் விலையை நிர்ணயித்து அதை உறுதியாகப் பேணல் ஆகியவற்றுக்கு அதிக கவனஞ் செலுத்துதல் அவசியமாகும்.

உலகப்போரில் அமெரிக்கா தனது மொத்த உற்பத்தியில் 45 சதவீதத்தை போருக்காக செலவிட்டது. இவ்வாறு ஜெர்மனி 35 சதவீதமும், கனடா 52 சதவீதமும்செலவிட்டுள்ளன. இவற்றைப்பொறுத்தவரையில் எமது பிரதேச மொத்த உற்பத்தி மிகமிக குறைவாகவே காணப்படுகிறது. பேராசிரியர் ஷெனுயின் கூற்றுப்படி நாட்டின் நான்கில் ஒரு பங்கு ஆக்கம் போருக்கு செல்லவேண்டும் என குறிப்பிட்டுள்ளார். இத்தகைய பெரிய ஓர் தொகையை நமது பிரதேசத்தில் எதிர்பார்க்க முடியாது விட்டாலும் கணிசமான அளவு தொகையைத்தானும் நாம் பயன்படுத்தலாம். ஆனல்அரசுகளைப்பொறுத்தவரையில்நாட்டின்மொத்த ஆக்கத்தில் மூன்றில் ஒரு பகுதியைத்தானும் போருக்கு பயன் படுத்தக்கூடிய நிலையில் உள்ளனர்.

அரசாங்கத்தினர் இதைப்பொறுத்தமட்டில்நான்கு வகையில் செயல்படுகின்றனர்.

## து. துஷ்யந்தன்

1. பொது நலத்துறைகளில் தற்தாலிக சிறு வெட்டுகளை ஏற்படுத்துகின்றனர்.

2. கட்டடங்கள் சட்டும் செலவுகள் ஒத்திப்போடப்படுகின்றன.

3. வெகு விரைவில் பயன்தரக்கூடிய சில திட்டங்கள் உடனடியாக நிறைவேற்றப்படுகிறது.

4. கடன் வாங்குதல்.

இத்தகைய திட்டங்களின் மூலம் அரசுகள் பல கோடி ரூபாவை பணமாகவோ பொருளாகவோ இலகுவில் பெறுகின்றன.

எவ்வாறுயினும் எம்மவரிடையே காணப்படும் தளரா உறுதியும், உயர் இலட்சியமும் இருக்கையில் பலகோடி பணங்களை எதிரி தூக்கிவீசினும் அது வீணே செல்லாக்காசாகிவிடும் என்பது நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழப்போராட்டத்தில் மாணவர்களின் நிலைப்பாடு

சுதந்திரப் போராட்டம் கூர்மை பெற்று உச்சக் கட்டத்தை எட்டிப் பிடித்திருக்கும் வேளையிலே... படித்தவர்களென்ருலென்ன; பாமரர்களென்ருலென்ன எதுவித பேதமுமின்றி AK47ஐயும், G 3ஐயும், கிற னேற்றையும், இன்னோரன்ன ஆயுதங்களையும் தூக்கும் காலத்திலே... தமது பங்களிப்புக்களையும் போராட்டத்திற்கு நல்குவதற்காக மாணவர்களும் தயாராகி போராளிகளாக மாறிக் கொண்டிருக்கின்றனர்.

அவ்வகையில், தற்போதைய மாணவர்களை மூன்று நிலையிலுள்ளவர்களாகப் பிரிக்கலாம். படிப்புடன் போராட்டத்தையும் நல்கும் சிறந்த மாணவர்கள், படித்தால் மட்டும் போதும் என நினைக்கும் மத்திம மாணவர்கள்; படிப்புமில்லாமல், எதுவிதப் போராட்டத்திலும் பங்குபற்ருமல், மற்றவர்களையும் மாற்றிக் கொண்டிருக்கும் கடைநிலை மாணவர்கள்.

தமிழ் ஈழத்தின் தனிப்பெருஞ் சொத்தே கல்விதானே. அதனை அழிக்க ஈனர்கள் எவ்வளவு பாடு பட்டபோதும் அழிக்கும் வேகத்தைவிட பன்மடங்கு வேகத்தில் எமது கல்வித் தரம் வளர்ந்து வருவது இக்காலகட்டத்திலும் பாராட்டப்படவேண்டிய பண்பாகும். போராட்டத்திற்கு தம் பங்களிப்பை நல்கும் அதே வேளையில் கல்வியிலும் கவனம் செலுத்தும் சிறந்த மாணவர்கள் உருவாகும் பிரதேசத்திலேயே இந்த மத்திம, கடைநிலை மாணவர்களு முருவாகிருர்கள் என்பது விசனிக்கத்தக்க விடயங்களிலொன்ருகும். எங்கும், எதிலும் விதிவிலக்குகள் இருப்பது கண்கூடு தானே... அவ்வகையில் இந்த மாணவப் புல்லுருவிகளும் அடக்கப்படுகின்ருர்கள்.

தனியப் படிப்புடன் மட்டும் காலங்கழிக்கும் மத்திம மாணவர்களின் நோக்கம் பல்கலைக்கழகம் புகுதல்; அன்றேல். வேலை பெறுதல். இவற்றை மட்டும் குறிக்கோள்களாய்க் கொண்டு "ராமன் ஆண்டாலென்ன; ராவணன் ஆண்டாலென்ன" எனும் அலட்சிய பாவத்துடன் "ஷெல்லடிக்கு ரவுணிற்குப் போகாமல் விட்டு... பொம்மர் அடிக்குப் பதுங்கு குழியில் பதுங்கி.. மீண்டும் சுயநலக் குறிக்கோளாய்ப் பயிலும் இம் மாணவர்கள் தம்மைத் திருத்திக் கொள்ள முற்பட வேண்டும். 24 மணிநேரத்தில் நித்திரை போக ஏனைய நேரத்தை படிப்பிற்கு மட்டும் செலவளிப்பதால் யாருக்கு லாபம்? "ஷெல்"லிற்கு படித்தவனையும், பாமரனையும் தெரியுமா? அதற்காகப் படிப்பவர்கள் குற்றவாளிகளல்ல. படிப்புடன் போராட்டமும் இணைந்து நடக்க வேண்டும். இதனுல். சுதந்திரத்தாயின் கலக்கம் நீங்குவதற்கான வழிமுறை தென்படும்.

போதைவஸ்துப் பாவிப்பு; மது வெறி ஆட்டம்; வம்பளத்தல்; எதுவிதப் பிரயோசனமுமில்லாமல் நேரத்தை வீணுக்குதல்... இதுபோன்ற கைங்கரியங்களை ஆவலுடன் செய்யும் அதேவேளையில் 'கலாசாரக் கொலையையும்' (எம்நிலைக்கு, எம் கலாசாரத்திற்கொவ்வாத முறையில் தம் ரசனைகளை வெளிப்படுத்துதல்) செய்யும் கடைநிலை மாணவர்களை எப்படித்தான் விபரிப்பதோ? இவர்கள், சைக்கிள்களில் வழிமறித்துச் செல்வதுடன், போராட்டத்தை இழிவான முறையில் கதைப்பதிலும் இன்பம் காண்கின்றனர்.

அழுகிய ஒரு பழத்துடன் நல்ல பல பழங்களை வைத்தால் எல்லாப் பழங்களும் வீணுகிவிடும். அதேபோல ஒரு தீய மாணவன் பல நல்ல மாணவர்களை திசைதிருப்பிவிடக்கூடும். அதற்கு, இந்த தீய மாணவன் தன்னிலை உணர்ந்து தானே திருந்த வேண்டும்; இல்லையெனின் திருத்தப்படவேண்டியது இக்காலகட்டத்தின் தலையாய கடமையாகின்றது.

**செல்வி செல்வராதா அப்புலிங்கம்**

இம் மாணவர்கள் வீணுக்கும் தம் நேரத்தை, தென்னிந்தியத் தரம் குறைந்த படங்களைப் பார்த்து அதேமாதிரி நடக்க முற்படும் நேரத்தை, பயனுள்ள வழிகளில் செலவழிப்பதனுல் தமக்கு மட்டுமல்ல; சூழலிற்கு மட்டுமல்ல; நாட்டிற்கும் நன்மை செய்தவர்களாகின்றனர். வீட்டுத்தோட்டம் அமைத்தல், தற்காப்புப் பயிற்சி எடுத்தல், முதலுதவிச் சிகிச்சை முறை அறிதல், உணவுத் தேவைக்காய் கால்நடை வளர்த்தல் போன்ற எம் தற்போதைய நிலைக்கேற்ற செயல்களைச் செய்வதன்மூலம் எல்லோருக்கும் நன்மை செய்தவர்களாகின்றனர்.

'மாணவ சமுதாயம் கடமை உணர்ந்து, விழிப்புடன் தம் கல்வியுடன் போராட்டத்தில் எந்த விதத்திலேனும் (இங்கு, படிப்புக்கூட ஒரு போராட்டம் தான். அத்துடன் மேற்குறிப்பிட்ட என்ன முறையிலேனும்) பங்குபற்ற வேண்டுமென்பது தற்போதைய காலகட்டத்தின் எதிர்பார்ப்பில் ஒன்ருகும்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமினுள்ளே அமைய இருந்த வயாவிளான் ம. ம. வி. முகாமான நிலை..?

யாழ்ப்பாணத்துக் கற்பக தருக்களும், பச்சைப் பசேல் எனக் காட்சி தரும் தோட்டவெளிகளும், இயற்கையன்னையின் உலர்வலயத் தாவரங்களும் நாற்புறமும் சூழ்ந்திருக்க, எழில் கொஞ்சும் இயற்கை அன்னையின் வனப்பின் மத்தியில் சுற்றுமதில்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, யாழ்ப்பாணம் பலாலி வீதியின் எட்டாவது மைல்கல்லருகே அமைதியான சூழலில் அழகுறக் காட்சியளிக்கிறது. பன்னிரண்டு ஏக்கர் விஸ்தீரணமுள்ள வயாவிளான் ம.ம.வி. இவ்வளவு விசாலமான பரப்பைக் கொண்டதும், கல்வி கற்பதற்கேற்ற இவ்வாறான அமைதியான சூழலிலுள்ளதுமான கல்லூரி ஒன்றை யாழ் மாவட்டத்திலே வேறெங்குமே காணமுடியாது. கிராமப்புறத்து மாணவர்களின் கல்வி நலனிற்காக ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி கிராமப்புறத்து மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் அவ்வப்போது கல்லூரிக்கு அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் வந்தவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டு, பலதுறைக்கும் மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கனுப்பிய தோடல்லாமல் விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்குகின்றது. பலதுறை அறிஞர்களையும் உருவாக்கி கோப்பாய் வட்டாரத்திலேயுள்ள ஒரேயொரு முதலாம் தரக் கல்லூரியாகத் திகழ்கின்ற வயாவிளான் ம.ம.வி. இற்கு நேர்ந்துள்ள கதியை யாவரும் நன்கறிவர். கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு நாற்பது ஆண்டுகள் நிறைவுறுகின்ற இத்தருணத்திலே கல்லூரி வரலாற்றில் மைல்கற்களாகத் திகழும் சம்பவங்களை இங்கு நினைவு கூருதல் சாலச் சிறந்ததாகும்.

1945ஆம் ஆண்டளவில் வயாவிளானிலும் அதனயலூர்களிலுமுள்ள மக்கள் தமது பகுதியில் செவ்விய ஆங்கிலப் பாடசாலை இல்லாத பெருங்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, பலாலியிலுள்ள இராணுவக் கட்டடங்களைப் பயன்படுத்தி மத்திய கல்லூரி ஒன்றினை அமைத்துத் தரும்படி அரசினரை வேண்டும் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றி அதனைச் செயலில் கொணரும் பொருட்டு அக்கால அரசாங்க சபை அங்கத்தவர் கலாநிதி சு. நடேசபிள்ளை அவர்களைப் போஷகராகவும், 'ஈழகேசரி' திரு. நா. பொன்னையா அவர்களைத் தலைவராகவும் கொண்ட குழு ஒன்றினைத் தெரிவு செய்தனர். ஆனால் மேற்படி இராணுவக் கட்டடங்கள் கிடையாதென்பதையறிந்த திரு நா. பொன்னையா அவர்கள் பன்னிரெண்டு ஏக்கர் விஸ்தீரணமுள்ள தமது 'மீனாட்சி' கமத்தைப் பயன்படுத்தி தமது சொந்தச் செலவில் மேற்படி கல்விச்சாலைக்கு இரு தற்காலிக கட்டடங்களை அமைக்கவும், தளபாடங்களை வாங்கிக் கொடுக்கவும் முன்வந்தார். கலாநிதி சு. நடேசபிள்ளை அவர்கள் இப் பரோபகார நன்கொடையை அரசினருக்கு எடுத்துக்காட்டி, மேற்படி கல்லூரி 'மீனாட்சி' கமத்திலேயே அமையவேண்டுமென அரசை வற்புறுத்தி அப்போதைய கல்விமந்திரி C. W. W. கன்னங்கரா அவர்களால் 16. 1. 46இல் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தைத் திறப்பித்து வைத்தார். 'ஈழகேசரி' திரு. நா. பொன்னையா அவர்களே வயாவிளான் ம. ம. வி.இன் ஸ்தாபகராவார்

இக் கல்லூரியின் முதலாவது அதிபர் என்ற பெருமை திரு. க. காராளசிங்கம் அவர்களையே சாரும். அவருடன் மூன்று ஆசிரியர்கள் நூற்றுப்பதினைந்து மாணவர்கள் ஆகியோருடன் பாடசாலை ஆரம்பமானது. திரு. க. காராளசிங்கம் அவர்கள் கல்லூரி வளர்ச்சிக்கு முன்னின்றுழைத்த அதிபர்களிலே முதலிடத்தில் வைத்துப் போற்றப்படக் கூடியவர். மாணவர்களைக் கல்வியிலும் விளையாட்டிலும் ஊக்கமுறச் செய்து, கல்லூரிக்கு ஆற்றிய தன்னலமற்ற சேவையே இக்கல்லூரி பிற்காலத்தில் இத்துணை முன்னேற்றமடைவதற்கு அடிநாதமாக விளங்கியது எனலாம். அதிபரின் பெருமுயற்சியால் கொட்டில்களாய் இருந்த வகுப்பறைகள் நன்கு திருத்தப்பட்டு, மாணவமாணவியர் விடுதிகளும் கட்டப்பட்டன. அரசாங்க மத்திய கல்லூரியாய் இருந்தமையால் வடமாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் புலமைப் பரிசில் பெற்ற வறிய மாணவர்கள் பலர் விடுதிச்சாலையில் தங்கியிருந்து இலவசக் கல்வி கற்று மேன்னிலையடையச் செய்த பெருமை இக்கல்லூரிக்குண்டு. 1972 தொடக்கம் சகல பாடசாலைகளிலும் தொழிற் கல்வி கற்பிக்கப்படவேண்டுமென அரசால் அமுல் செய்யப்பட்டது. ஆனால் இங்கு தொன்றுதொட்டே தொழிற் கல்விகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. அதிபர் திரு. க. காராளசிங்கம் அவர்கள் சுமார் பதினைந்துஆண்டுகள் கல்லூரி வளர்ச்சிப்பணிகளில் பங்கு கொண்டுழைத்த 'சிற்பி' என நினைவுகூரத்தக்கவர்.

**பொ. கோகுலகிருஷ்ணன்**

கல்லூரியின் இரண்டாவது அதிபராக திரு. கே. நவரத்தினராசா அவர்களும், அதனைத் தொடர்ந்து திரு E.V. J. ஹென்ஸ்மன் அவர்களும் கடமையாற்றினார்கள். 1970இல் திரு. ஹென்ஸ்மன் அவர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து திரு. S. ஆறுமுகம் அவர்கள் பதில் அதிபராகச் சிலகாலம் கடமையாற்றினர். அதனைத் தொடர்ந்து ஐந்தாவது அதிபராக திரு. பொ. சபாரட்ணம் அவர்கள் கடமையாற்றினர். இவருடைய காலத்திலேயே கல்லூரியின் வெள்ளி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதன் நினைவாக வெள்ளிவிழா மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டது.

1972 தொடக்கம் 1985 வரையுமான காலமே வயாவிளான் ம. ம. வி. இன் பொற்காலமாகும். இங்கு பொற்காலம் என்பது வெறும் சம்பிரதாயத்திற்காகக் கூறப்பட்ட ஒன்றல்ல. ஏனெனில் இக்காலகட்டத்திலேயே திரு. ஆ. இராமசாமி அவர்கள் அதிபராகக் கடமையாற்றி கல்லூரிக்குச் செய்த அளப்பரிய சேவையின் காரணமாக கல்லூரி அடைந்த வளர்ச்சியை நாடு நன்கறியும். கல்வியில் ஏற்படும் மறுமலர்ச்சிக்கு ஏற்ப இக்கல்லூரியும் மறுமலர்ச்சியுற்று எதிர்காலத் தேவைகளைத் தன்னுள் அடக்கி, அதற்கேற்றவாறு கல்வித்திட்டத்தை உருவாக்கி, மாணவர் வாழ்வில் நலமும் வளமும் பெறத்தக்க முறையில் கல்விச் சேவையை மாணவர்களுக்கு வழங்கச் செய்து கோப்பாய்க் கல்வி வட்டாரத்திலே ஒரேயொரு முதலாம் தரக் கல்லூரியாகவும், யாழ். மாவட்டத்திலேயுள்ள முதலாம்தரக் கல்லூரிகளுள் ஒன்றாகவும் உயர்த்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைக்குரியவர். அத்துடன் ஒவ்வொரு மாணவரிடத்திலும் மிகவும் கண்டிப்பாகவும், அன்பாகவும் நடந்து ஒழுக்கமுள்ள கட்டுக்கோப்பானதோர் மாணவ சமுதாயத்தை உருவாக்குவதில் முன்னின்றுழைத்தார்.

கல்லூரி ஒரு அரசினர் பாடசாலையாக இருந்த போதும் 'தன் கையே தனக்குதவி' என்று கருதிய அதிபரவர்கள் ஒவ்வொரு மாணவனிடத்திலிருந்தும் இருபத்தைந்து ரூபா வீதம் அறவிட்டும், கல்லூரி அபிமானிகளிடமிருந்தும் பெற்ற பணத்தைக் கொண்டு பன்னிரெண்டு ஏக்கர் விஸ்தீரணமுள்ள பாடசாலையைச் சுற்றிலும் மதில் கட்டுவித்தார். மாணவர்களுக்கு நல்ல முறையில் விஞ்ஞானம் கற்பிப்பதற்கு நவீன விஞ்ஞான ஆய்வுகூடம் வேண்டுமென்று கருதிய அதிபரவர்கள் நவீன வசதிகளுடன் கூடிய விஞ்ஞான கூடம் ஒன்றிற்கான மாடிக்கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் சிலரின் அநுசரணையுடன் ஒழுங்குகளை மேற்கொண்டார். வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 'பஃறொடை விஞ்ஞான ஆய்வு கூடம். அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களால் 7-11-1682இல் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. அறுபதாவது வயதிலும் இளமைத் துடிப்புடன் செயற்பட்டு, கல்லூரி வளர்ச்சிக்கு அயராது உழைத்த அதிபர் திரு. ஆ. இராமசாமி அவர்களின் அளப்பெரும் சேவையின்சின்னமாக விளங்கியது 'பஃறொடை' விஞ்ஞான ஆய்வு கூடம். அதிபர் திரு. ஆ. இராமசாமி அவர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து கல்லூரியின் புதிய அதிபராக திரு. நா. கணேசபிள்ளை அவர்கள் பதவியேற்று கல்லூரி வளர்ச்சியிலும், கல்லூரிப் பாரம்பரியங்களைப் பேணுவதிலும், மாணவர்களுக்கு கல்வியூட்டச் செய்வதிலும் மிகுந்த அக்கறையுடன் திறம்படச் செயலாற்றி வருகிறார்.

கல்லூரி வளர்ச்சியில் அக்கறை கொண்ட அபிமானிகள் யாபேரையும் 17. 5. 1986 அன்று நடைபெற்ற எதிர்பாராத சம்பவம் நிலைகுலையவைத்தது. ஆமாம்! இப்போது வயாவிளான் ம. ம. வி. இராணுவ முகாமாக்கப்பட்டு விட்டது. ஆனாலும் அதிபர். திரு. நா. கணேசபிள்ளை அவர்கள்:

''இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாதவர்''

எனும் பொய்யாமொழிக்கு ஏற்ப மனோதிடத்துடன் செயற்பட்டு கல்லூரி நிலைகுலைந்தாலும் கல்லூரி மாணவர் குழாமையும், கல்வியையும் நிலைகுலையாமல் பேணி நடாத்துவதற்கேற்ற ஒழுங்குகளை மேற்கொண்டார். இதன் பயனாக பல்த்த சிரமத்தின் மத்தியில் வயாவிளான் ம. ம. வி புன்னாலைக்கட்டுவனிலுள்ள அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. எத்தனையோ கஷ்டத்தின் மத்தியிலும் மாணவர்கள் கல்வியில் அக்கறை செலுத்தி தன்னலமற்ற சேவை புரிந்துவரும் அதிபர் மற்றும் ஆசிரியர்களினதும் சேவை தமிழ் மாணவ சமுதாயத்திற்குச் செய்யப்படும் 'தியாகம் என்றால் மிகையாகாது.

29. 8. 86 அன்று கல்லூரி அபிமானிகள் மத்தியில் ஒரு பரபரப்பு. 'இராணுவத்தினர் போய்விட்டார்கள்; மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சி. நமது கல்விக்கோயிலைத் தரிசிக்கப் போகிறோம்என்ற ஆதங்கம். புயலுக்குப் பின்வரும் அமைதி ஆனால் இங்கே அமைதிக்குப் பின் ஒருபுயல் 1. 9. 1986 அன்று தமிழர் கல்வி வரலாற்றில் கறைபடிந்த ஒரு நாள். யாழ்ப்பாணத்தில் வேறு எந்தப் பாடசாலைகளும் கொண்டிராத 'பஃறொடை' விஞ்ஞான ஆய்வு கூடம் சிதைந்துவிட்டது. நான்கு ஆசிரியர்களுடனும், நூற்றுப்பதினைந்து மாணவர்களுடனும் ஓலைக்குடில்களில் ஆரம்பிக்கப்பட்ட வயாவிளான் ம. ம. வி. அறுபது ஆசிரியர்களுடனும் ஆயிரத்து இருநூறு மாணவர்களுடனும் வானளாவிய பல கட்டிடத் தொடர்களுடன் கூடிய கல்லூரியாய் வளர்ச்சியடைந்து, கல்வியை அள்ளி வழங்கிய கல்விக்கோயிலின் எழில் சிதைந்துவிட்டது இராணுவ முகாமில் அமையஇருந்த வயாவிளான் ம. ம. வி. இப்போது இராணுவ முகாமாகவே மாற்றப்பட்டுவிட்டது. 'காலம் ஒரு நாள் மாறும்; நம் கவலைகள் யாவும் தீரும்'. காலங்கள் கடந்தாலும் அதே இடத்தில் மீண்டும் ஒரு கல்விக்கோயில் ஒன்று உருவாகும் என்பதே எமது திடமான நம்பிக்கையாகும்.

---



பிரேமதாஸா

இலங்கையின் பிரதமர் வரிசையில்இப்போதுமிகவும் அமைதியாக இருப்பவர் பிரேமதாசா. "இந்தியாவே இயலுமென்றால் போருக்குவா" என அழைத்தவரும் பிரேமதாசாவே! இப்போது இவர் அமைதியாக இருப்பதன் அர்த்தமே விளங்கவில்லை.

வெசாக் காலம் வரும்போதெல்லாம் பிரேமதாசா பேசாது இருப்பதில்லை. சென்ற வெசாக் தினத்தின் போது 'அண்ணன் தம்பியருக்குள் ஏதாவது அடிதடி ஏற்பட்டால் காணியைப் பங்கிட்டுக் கொடுப்பது தான் புத்திசாலித்தனமானது' எனச் சொல்லிவைத்தவர் பிரேமதாசா. ஆனால் இப்போது இலக்கியத்தில் இருந்தோ, அரசியலில் இருந்தோ எதுவித உதாரணங்களையும் எடுத்தாளாமல் இருப்பது ஆச்சரியமானது. அடுத்த வெசாக் தினத்தில் ஏதாவது சொல்வாரா என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

10 லட்சம் வீடுகளைக் கட்டும் திட்டத்தில் பிரேமதாசா கடுமையான முன்னேற்றம் கண்டுள்ளார். அதேசமயத்தில் தமிழ் மக்களின் ஆயிரக்கணக்கான வீடுகளை அழித்ததில் இவருக்கு அனுதாபம் கூட ஊற்றெடுக்கவில்லை.

( சிறுபான்மையினரின் வீடு என்றால் பிரதமருக்கு அலர்ஜியோ ..?

— பிரதாபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ராஜீவ்விஜயசிங்க’ பார்வையில் ஸ்ரீலங்காவின் இனப்பிரச்சனை ...

ராஜீவ் விஜயசிங்க ஒரு சிங்களவர். ஒக்ஸ்போட் கருத்தரங்கில் அவர் வைத்த இலங்கை இனப்பிரச்சினைக் கருத்துக்கள் ‘Current Crisis in Sri Lanka’ என்ற நூல் சமீபத்தில் வெளியாகி உள்ளது. தாசி வித்தாச்சி அவர்களின் ‘இனக்கலவரம் 58’ எவ்வாறு புகழ் பெற்றதோ அவ்வாறே இந்த நூலும் பிரபல்யமாகும் என எதிர்பார்க்கலாம். இந்நூலில் உள்ள சில கருத்துக்களை ஈழமுரசு வாசகர்கட்காக மொழி பெயர்த்துத் தருகின்றோம் (ஆ+ர்)

**மறைக்கப்பட்ட விசயம்**

1983இல் 13 ராணுவ வீரர்கள் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டார்கள். அதைத் தொடர்ந்து 45 தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்டார்கள். ஆனல் இந்த விசயம் சிங்கள மக்களுக்குத் தெரியாது மறைக்கப்பட்டது.

**36 மணிநேரம் 25 குழுக்கள்**

36 மணிநேரம் கொழும்பு நகரத்தில் 25 குழுக்கள் தமிழர்களைக் கொல்வதிலும் தீயிடுவதிலும் காலத்தைக் கடத்தின. அரசாங்கம் நினைத்திருந்தால் இதனைப் பரவாது தடுத்திருக்க முடியும்.

**வியப்பான சங்கதி!**

இந்த நேரத்திலும் தொண்டமான் அரசாங்கத்தை ஆதரித்தது வியப்பான சங்கதிதான்! கலகத்தின் பின்பு ரெலிவிஷனில் தோன்றிய அமைச்சர்கள் தமிழ் மக்களுக்குச் செய்யப்பட்ட இன்னல்கள் பற்றி எதுவுமே சொல்லவில்லை. இவர்களில் அமைச்சர் லலித் பிரதமர் பிறேமா முக்கியமானவர்கள். பெரும்பாலும் இனப்பிரச்சனைக்கு மார்க்சீய முலாம் பூசியவர்கள் இவர்கள்.

**கலகம் ஓய்ந்த காரணம்!**

83ஆம் ஆண்டு இனக்கலவரம் தொடர்ந்து நடைபெருது விட்டமைக்குக் காரணம் இந்தியா கொடுத்த எச்சரிக்கையே. இன்றேல் கலவரம் ஓய்ந்திராது. இந்த எச்சரிக்கை மத்தியிலும் ஜூலை 28இல் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஜே ஆர். தான் கலங்கிய நிலையைக் காட்டிக் கொடுக்கவில்லை.

**இஸ்ரவேல் வந்த காரணம்!**

இனக்கலவரத்தால் இந்திய தலையீட்டுக்கு அஞ்சிய இலங்கையரசு வெளிநாட்டு அமைச்சரை இங்கிலாந்துக்கு அனுப்பியது. இந்தியா இலங்கையைத் தாக்கினல் 1947ஆம் ஆண்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் பேரில் பிரிட்டன் இலங்கைக்கு உதவுமா என வினவப்பட்டது. ஆனல் அதற்கு எதிர்மறையான கருத்தே பிரிட்டனல் வழங்கப்பட்டது. இந்நிலையில் இஸ்ரவேல் தான் இலங்கைக்கு உதவி செய்ய முன்வந்தது. இஸ்ரவேல் இங்கு வந்ததன் பின்னணி இதுதான்!

**அகதிகள் அகதிகளே!**

ஆறுமாதகாலங்கள் அகதி முகாம்கள் சரியான முறையில் கவனிக்கப்படவில்லை. இந்த இடைக்காலத்தில் தெற்கில் இருந்த பல தமிழர்கள் கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகட்கும் இடம் பெயர்ந்தார்கள்.

**வெலிக்கடைக் கொலைகள்**

வெலிக்கடைக் கொலைகள் நடந்தபோது அதை எதிர்த்து நீதி மந்திரி தனது ராஜினுமாவைச் சமர்ப்பித்தார். ஆனல் ஜே ஆர் இந்த ராஜினுமாவை ஏற்கவில்லை. இக்கொலையைச் செய்தவர்கள் தீர விசாரிக்கப்படவுமில்லை; தண்டனை வழங்கப்படவும் இல்லை. (Uninvestigated and unpunished)

**வட்ட மேசை மகாநாடு**

வட்டமேசை மாநாடு ஆரம்பிப்பதற்கு முன்பு எல்லாக் கட்சிகளுடனும் அவர் கலந்து ஆலோசிக்கவில்லை. இப்பிரச்சனையை உண்மையில் தீர்க்கும் உட்கிடக்கை அவருக்கு இருக்கவில்லை, அதைவிட அவரின் 7/8 பெரும்பான்மை, எம். பிக்களிடமிருந்து ஏற்கனவே பெறப்பட்ட ராஜினுமாக் கடிதங்கள் என்பன அவருக்குத் தெம்பை ஊட்டின. தமிழர் கூட்டணியைக் கூட அழைக்கும் உத்தேசம் அவருக்கு இருக்கவில்லை. மற்றவர்களின் வற்புறுத்தலே அழைத்தமைக்குக் காரணம்.

நூல் வெளியீட்டாளர்: — நவராங்,
B 7, இந்திரபுரி நியூடெல்கி 110012
நூலோடி:- திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

## றீகனைப் பற்றிச் சில செய்திகள்



அமெரிக்க அதிபர் றீகன் சினிமாவில் நடிகராக இருந்தவர். அதுபோன்று அவருடைய வாழ்க்கையும் சினிமாப் பாணிபோன்றே இருக்கின்றது. றீகன் தனது இருபத்து ஒன்பதாவது வயதில் ஜேன் வைமன் என்ற பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டார். சினிமாப் பணியில் சில காலங்களில் அப்பெண்ணை றீகன் விவாகரத்துச் செய்து விட்டார்.

அவரின் யுத்தச் செயற்பாடுகளில் நட்சத்திரப் போர்த்திட்டம் (Starwar) மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்ருகும. இதைப் போலவே றீகன் நடித்த புகழ் பெற்ற படங்களின் பெயர்களும் சில ஆச்சரியப் படத்தக்க தலைப்புக்களைக் கொண்டதாக இருக்கின்றது. அவைகளில் மாதிரிக்காகச் சிலவற்றைப் பாருங்கள்.

1. Dark Victory
2. Nine lives are enough
3. Bed time order

றீகனின் இன்றைய மனைவி நான்சி, றீகனின் இரண்டாவது மனைவி.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகரகுவா

## பெண் விடுதலை போராளி ''மரீலியா''

நிகாரகுவா போர்க்களம்-

பெண் எனும் சாயலே இன்றி கைதேர்ந்த போர் வீரர்களைப் போல ஆயுதங்களேந்திக் கொண்டும், மடமடக்கும் போர்க்காலச் சீருடைகள் அணிந்து கொண்டும், பெண் போராளிகள் அங்கே நிறையப்பேர் இருந்தார்கள்.

சோமாசா பயங்கரவாதப் படைகளை எதிர்த்து யுத்தத்தில் பயமற்றவர்களாய்- அச்சமற்றவர்களாய்- அபாயங்களையும், துன்பங்களையும் சரிநிகர் சமானமாகப் பகிர்ந்து கொண்டார்கள்.

இவர்களுக்கு மத்தியில்தான்- நிகரகுவா ரகசியப் படைப்பிரிவிலுள்ள- மரீலியா சராஜேவைச் சந்திக்க நேர்ந்தது. அவர் இரண்டாண்டு காலம் எதிரியின் தலைமையகத்திலேயே உளவாளியாய் பணியாற்றிய வீராங்கனை...

'1982- ல் அவருக்கு என்ன வயதிருக்கும்?'

'துரோகி ஈடன் பாஸ்டோராவின் அலுவலக ஊழியர் தலைமைக் குடியிருப்புக்குள் அவர் வேலை செய்யச் சென்றபோது அவருக்கு என்ன வயசிருக்கும்?'

அவர் சொன்னார்: ''எனக்கு அப்போது இருபது வயது. சுதந்திரமாகவும், திடசித்தத்தோடும் இயங்கக் கூடிய வயது. நாங்கள் சீக்கிரமாகவே வளர்ந்து போராளிகளாய் மாற வேண்டிய காலமல்லவா அது? நான் எனது பதினைந்தாவது வயதில் ஒரு தலைமறைவுப் போராளியாய் மாறினேன். பதினாறாவது வயதில் சோமாசா தேசிய பாதுகாப்புப் படைக்கு எதிராகத் தெற்குப் போர்முனையில் போராடினேன். அங்கிருந்த கொரில்லா முகாமில் தோழர் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டேன். ஒரே மாதத்தில் விதவையும் ஆனேன்.''

பாஸ்டோராவின் தலைமையகத்தில் (உளவுப்பணி பார்க்க) வேலை தேடிச் சென்றபோது அவர்கள் அவரை நீண்ட, இடைவிடாது விசாரணைக்கு உட்படுத்தினர்கள். அமெரிக்க ஏஜண்டுகளோ அமைதியாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தனியறை- வெளியே ஆயுதம் தாங்கிய காவலர்கள்- அச்சமூட்டும், மிகப்பெரிய கதவுகள் சுற்றிலும் வெறுப்பும், சந்தேகமும் கொண்ட பார்வைகள்.

குறுக்கு விசாரணை நடந்தது.

'உங்களுக்குப் பயமாக இல்லையா?'

'ஆம். மிகவும் அச்சமாகத்தான் இருந்தது. பயங்கரமாகக்கூட இருந்தது. போர் முனையில் நான் ஒரு போராளியாய்- ரேடியோ ஆபரேட்டராய்- மருத்துவத் தாதியாகவும் கூட பணியாற்றியிருக்கிறேன். எதிரிகளைப் பார்த்துச் சுட்டிருக்கிறேன் ஆனல்- எதிரிகளுக்கு நடுவிலேயே -எதிரிகளின் வேலையாளாய் பணியாற்ற நேர்ந்தது இதுதான் முதன் முறை. இரவு முழுவதும் தூங்காமல் கண்விழித்த நாட்கள் பல. ஏனெனில் தூங்கும்போது கூட எனக்கு எதுவும் நேரலாம். போர், எனக்குப் பயப்படாமல் இருக்கக்கற்றுக் கொடுத்திருந்தது. அது எங்கள் வெற்றிக்காக. புரட்சி, எனக்கு எதிரிகளிடம் வேலை செய்யப் பணித்திருக்கும்போது அதற்கு உதவாத அச்சம் என்னிடம் எப்படி இருக்கலாம்?'

'எப்படியும் நீங்கள் பாஸ்டோராக் கும்பலின் ரகசியங்களைப் பெற்றுவிட முடிந்தது இல்லையா?'

'முழுவதுமாகப் பெற்றுவிட முடியவில்லை. பாருங்கள், பாஸ்டோராவும் அவனது சி. ஐ. ஏ. (அமெரிக்க உளவு ஏஜண்டுகள்) தலைவர்களும் யாரையும் எளிதில் நம்பிவிடுவதில்லை. ஏன் அவர்கள் தங்களைக் கூட நம்புவதில்லை. ஆனல் அந்தத் துரோகி வெற்று ஆள்தான். அவன் தனது சுயதம்பட்டத்தில் விஷயங்களை வெளியிட்டு விடுகிறன். ஒரு நேர்த்தியான இசையைக் கேட்பதைப் போல அவன் தன்னுடைய பேச்சை மணிக்கணக்கில் தானே பேசக் கேட்டுக் கொண்டிருப்பான். அவன் சில சமயம் நடுநிசியில் தொலைபேசியில் கூப்பிட்டுப் பேசிக்கொண்டே மணிக்கணக்கில் பேசிக்கொண்டே இருப்பான். கற்பனை செய்து பாருங்கள். பகல் பூராவும் பயங்கரமான சூழ்நிலையில்- எந்த நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சவுணர்வும், இரவு முழுதும் இந்தப் பாஸ்டோரா துரோகியின் பேச்சைக் கேட்டுக்கொண்டே இருக்கவும் வேண்டுமென்றல்... ஆனல் புரட்சி யுத்தம் எனக்கு அச்சத்தை வெல்வதற்குக் கற்றுக்கொடுத்திருந்ததைப்போலவே பொறுமையாக இருக்கவும் கற்றுக்கொடுத்திருந்தது.'

1977-ல் மரீலியா கத்தோலிக்கக் கல்லூரி ஒன்றில் தனது படிப்பை முடித்துவிட்டு நிகாரகுவாவிலிருந்து கோஸ்டா ரீகாவுக்குப் புறப்பட்டுச் சென்றர். அவர் தலையைச் சுற்றி எப்போதும் 'கழுகுகள்' வட்டமிட்டுக் கொண்டே இருந்தன. சோமாசாவின் ரகசிய போலீஸ் அவரை எப்போதும் தங்கள் கண்காணிப்பிலேயே வைத்திருந்தது. அவர் கைது செய்யப்படுவதற்கு எப்போதும் 'சில நாட்களோ, சில மணி நேரமோ' என்ற நிலையே இருந்தது.

எனவேதான் அவர் கோஸ்டா ரீகாவிலுள்ள தனது தந்தையின் இருப்பிடத்துக்கு ரகசியமாகச் சென்று சேர்வது என்று முடிவாயிற்று. அவருடைய தந்தையோ சாண்டினிஸ்டா தேசியப் பாதுகாப்புப் படையின் செய்தித் தூதராக வேலை செய்து வந்தார். அப்போது அவர் கொரில்லாப் போர் முனைக்கு அருகாமையில் உள்ள இன்னொரு பகுதியில் இருந்தார்.

மரீலியா, நிகாரகுவாவிலிருந்து போலீசுக்கு டிமிக்கி கொடுத்து வெற்றிகரமாகவே தப்பிச் சென்றர். இரண்டு வாரங்கள் பாதுகாப்பு உணர்வுடனும், அமைதியுடனும் இருந்தார். அதன்பிறகும் ஒய்ந்திருக்க விரும்பவில்லை. கடுமையான உடலுழைப்பைக் காட்டிலும் சோம்பலாயிருப்பது துன்பமாயிருந்தது. நிகாரகுவாவின் எல்லையிலிருந்த கொரில்லாப் பயிற்சி முகாமுக்குப் போக முடிவு செய்தார். மலைகளுக்கு இடையே இருந்த அந்தப் பயிற்சி முகாமை அவர் கண்டுபிடித்துவிட்டார்.

செய்தி தந்தைக்குச் சென்றது. விரைந்து வந்தார். தனியாக அழைத்து விசாரித்தார். பிறகு கொரில்லாப் பயிற்சிகொடுக்கும் கமாண்டரிடம் கூட்டிச் சென்றர். வருத்தம் தோய்ந்த, மெல்லிய-ஆனல் திடமான குரலில் கமாண்டரிடம், 'மிகவும் நல்லது. இவள் இங்கேயே இருக்கட்டும். ஆனல் கமாண்டர் அவர்களே, ஆண்களைக் காட்டிலும் அதிக அளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளிடம் நீங்கள் கோரவேண்டும். சலுகை காட்டுவதோ, அலவன்சு எதுவும் கொடுப்பதோ வேண்டாம். நீங்கள் யுத்தத்துக்கு தயாரித்துக் கொண்டிருக்கிறீர்கள். இங்கு யாரும் சுமையாகி விடக்கூடாது. பலவீனமானவர்களிடம் நீங்கள் பயிற்சியின்போது நூறுமடங்கு அதிகம் செய்யச் சொல்லவேண்டும். அப்போதுதான் பலவீனமானவர்கள் உண்மையான போர் வீரர்களாய் மாறமுடியும். வெற்றியைக் காணும் வாய்ப்பு இருக்கும்' என்று கூறினார்.

ஒரே ஆண்டில் மரீலியா தன் முதற் போர்க் களத்தைக் கண்டார்.

'பாஸ்டோரா மக்கள் மீதான தன்னுடைய ஆதிக்கத்தை என்றுமே சந்தேகித்ததில்லை. இந்தச் சூழ்நிலை எனக்கு எதிரியிடம் நம்பிக்கையைச் சம்பாதித்துக் கொள்ள உதவியது. எப்படியிருந்தாலும் அவர்கள் யாரையும் முழுமையாக நம்பிவிடவில்லை. ஸென்ஜோஸ் தெருவில் நான் எப்போதும் பின்தொடரப்பட்டேன். நான் மாலையில் வீடு திரும்பும்போது என்னுடைய பொருள்கள் கலைந்திருக்கும். ஏதாவது தேடிப் பார்க்கப்பட்டிருக்கும்.

பாஸ்டோராவின் தலைமையகத்தில் ஒரு முன்னாள் தேசிய பாதுகாப்புப் படை அதிகாரி இருந்தான். அவனை 'எல்டைகர்' (El Tiger) என்று அழைப்பார்கள். அவன் பிறரைத் துன்புறுத்துவதில் மகிழ்ச்சி காண்பவன். ஒரு ஏவப்படும் ரௌடியும் கூட. அவன் எதிரிகளைத் தன் கைப்படக் கொடுமைப் படுத்துவதையும், சுட்டுக் கொல்வதையும் விரும்பிச் செய்வான் என்று எனக்குச் சொல்லியிருந்தார்கள். அவன் என்னை இடைவிடாது கண்காணித்தான். அவனுக்கு ஏற்படும் ஒரு சிறு சந்தேகம் கூட என்னைத் தீர்த்துக் கட்டிவிட அவனுக்கு உதவும் என்பது எனக்குத் தெரியும், 'எச்சரிக்கை, பொறுமை, கவனம்'— இந்த வார்த்தைகளை நான் திரும்பத் திரும்ப உச்சரித்துக் கொண்டேன்.'

'எதிரிகளிடையே இருந்த இரண்டாண்டு காலத்தில் நீங்கள் எத்தனையோ அபாயங்களைச் சந்தித்திருப்பீர்கள். சில அபாயகரமான சூழ்நிலைகளும் இருந்திருக்கும். அப்படி..?'

"ஆம் நிறையவே அப்படி நடந்திருக்கிறது. இப்போதும் அந்த மாதங்களை நினைத்துப் பார்க்கும் போது...

பதட்டம் நிறைந்த நீண்ட பகல் நேரங்களும் அபாயமும் அச்சமூட்டும் சம்பவங்களும் சூழ்ந்த இரவுகள்-என்றபயங்கரமான நாட்களாகவேகருதுகிறேன். சில சம்பவங்களின் எல்லா விபரங்களையும் நினைவில் வைத்திருக்கிறேன். ஒரு செய்தித் தூதருடன் ஒரு கூட்டத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது நான் பின்தொடரப்படுவதை உணர்ந்தேன். திரும்பிப் பார்த்தபோது ஒருவரும் இல்லை. மெதுவாக, வேகமாக, ஓடியும், நடந்தும், சந்து பொந்துகளிற் சுற்றியும், வளைந்தும், நெளிந்தும்... எல்லா வழிகளையும் முயற்சி செய்தேன். என்னை நிழல்போல் தொடர்ந்து வந்த எதிரியின் கண்களிலிருந்து தப்பவே முடியவில்லை. பேசாமல் திரும்பி நடந்தேன். தங்கியிருந்த இடத்துக்கே வந்து சேர்ந்தேன். செய்தித் தூதரைத் தொடர்ந்து செல்ல முடியவில்லை. சோபாவிலேயே மாலைவரை உட்கார்ந்திருந்தேன். ஒவ்வொரு சிறு சத்தத்தையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். இப்போது கூட நான் உண்மையில் பின் தொடரப்பட்டேனா... இல்லை உணர்வுதான் அப்படியிருந்ததா என்று சொல்ல முடியவில்லை."

"இன்னொரு சம்பவமும் கூட 1983 மே மாதம் நான் பாஸ்டோராவின் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டேன். நான் உள்ளே நுழைந்த போது அவன் என்னைச் சந்திக்க வந்தான். அவன் முகம் ஒரு கத்தோலிக்கச் சாமியாருடையதைப் போல இறுகியிருந்தது. என்னுடைய கண்களுக்குள் தனது பார்வையைச் செலுத்தி அவன் அனுதாபத்துடன் சொன்னான்:

"உன்னைத் தைரியப்படுத்திக்கொள் மரீலியா. உனது சகோதரன் நுவா சான்டினிஸ்டா போராட்டத்தில் இறந்து விட்டான் என்று செய்தி வந்துள்ளது. ஆனால் ஒன்று மட்டும் தெரிந்து கொள். அவனுடைய சாவுக்கு அவர்கள்தான் காரணம். அவனை போராடவைத்தவர்கள் அவர்கள்தான். புரிந்ததா? நான், "ஆம் அந்தப் பாழாய்ப்போன சான்டினிஸ்டாக்களும். அவர்களுடைய புரட்சியும்தான் எனது தம்பியின் சாவுக்குக் காரணம்" என்று பதில் சொல்ல வேண்டியிருந்தது.



பெண் விடுதலைப் போராளிகள்

"என்னுடைய கணவர் கில்லர்மோ சொல்லப்பட்டபோது, நான் முடிவில்லாது பல நாட்கள் அழுதேன். ஆனால் என்னுடைய சகோதரனுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் கூட சிந்தமுடியாத நிலையில் நான் இருந்தேன்.

கில்லர்மோ, கோஸ்டா ரீகாவிலிருந்த கொரில்லா முகாமின் பயிற்சி கொடுக்கும் கமாண்டர்களில் ஒருவராக இருந்தார். புரட்சிகர மாணவர் கழகத்தில் தலைமறைவு வேலைசெய்து வந்த போதிலும் கூட மரீலியா ஒரு காதல் மணம் கொண்ட உற்சாகப் பறவையாகத்தான் இருந்தார்.

மலைகளில்தான் அவர் விவசாயிகளின் வாழ்க்கை பற்றிய முதல் அறிவைப் பெற்றார். அவர் அறியாத, கேள்விப்படாத விசயங்களைப் பார்த்து அறிந்து கொண்டார். நிரந்தரமான போர்முனை கிடையாது. நிகாரகுவா, கோஸ்டா-ரீகா விவசாயிகளும், மக்களும் கொரில்லாக்களுக்களுக்கு உணவு ஏற்பாடு செய்து தந்தார்கள். வறுமை, பட்டினி, நோய் இவற்றால் மெலிந்த கால்களும், துயரம் தோய்ந்த கண்களும், வீங்கிய வயிற்றுடனும் ரிக்கெட் நோய் பிடித்த குழந்தைகளைப் பார்த்து அதிர்ந்து போனார். இது ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிலிருந்து மாலைவரை உழைக்கும் இந்த மக்கள் ஏன் இப்படி மனிதர்களுக்குரிய வாழ்க்கை இல்லாமல் மடிந்து போகிறார்கள்? இந்தக் கேள்விகள் அவரைச் சித்திரவதை செய்தன. பதில் கிடைக்கவில்லை.

ஒவ்வொன்றைப் பற்றியும் கில்லர்மோ அவருக்கு விளக்கினார். கில்லர்மோ, மார்க்ஸ்- ஏங்கல்ஸ் ஆகியோரது நூல்களைக் கற்றவர். அவர், லெனினுடைய 'அரசும், புரட்சியும்' நூலை வரிவிடாமல் இதயத்தில் பதிவு செய்து வைத்திருந்தார். அவர் போர்க்கலையை மட்டும் மரீலியாவுக்குக் கற்றுத் தரவில்லை; அவருடைய சமூக, அரசியல் உணர்வை உயர்த்தினார். மரீலியாவிடமிருந்த கத்தோலிக்க மதக் கருத்துக்களையும், குட்டி முதலாளிய புரட்சிகர சாகசத்தையும் துடைத்தெறிந்தார். அதன் பிறகு பெர்னார்ட்ஷாவின். 'பிக்மாலியானில்' (Pygmalion)வருவதைப் போல அவரைக் காதலிக்கவும் தொடங்கிவிட்டார்.

சொல்லப்போனால் மலைமுகட்டில் அவரைச் சந்தித்த முதல்நாளிலிருந்தே மரீலியா அவருடைய வலிமையையும், திறமையையும், வெட்கத்துடன் கூடிய அடக்க சுபாவத்தையும் விரும்பினார். காதல் எப்படி வந்ததென்று யாரால்தான் சொல்ல முடியும்?

1979 ஏப்பிரல் மாதக் கடைசியில் ஒரு கிராமத்துக் கோயிலில் தாங்கள் போர்க்காலச் சீருடையுடன் தோன்றி பாதிரியாரைத் திகைக்க வைத்துத்திருமணம் செய்து கொண்டார்கள். அதன் பிறகு அவர்கள். பிரிந்துவிட நேர்ந்தது. ஒருவருக்கொருவர் கடிதம் மூலமாகவும் செய்திகளைப் பரிமாறிக் கொண்டார்கள். பிறகு மே மாத இறுதியில் 'பினூஸ்-பிளாஸ்காஸ்' என்ற சாண்டினிஸ்டாக்களால் விடுவிக்கப்பட்ட நிகரகுவா நகரில் சந்தித்துக் கொண்டார்கள்.

ஆனால் அடுத்த நாள் காலையிலேயே கில்லர்மோ ஒருதாக்குதலில் கொல்லப்பட்டார்.

---

'உங்களுடை எதிர்காலம் பற்றி... மரீலியா என்ன சொல்கிறீர்கள்?'

பாருங்கள் தோழர்! ஒவ்வொரு பெண்ணையும் போலவே நானும் அமைதியையும், மகிழ்ச்சியையும். குடும்பம், ஆரோக்கியமான குழந்தைகள், நல்வாழ்வு எல்லாவற்றையும் விரும்புகிறேன். ஆனால் அமெரிக்கா




எங்கள் மீது திணித்திருக்கும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்த போராட்டத்தில் நான் சாண்டினிஸ்டா மக்கள் இராணுவத்தின் ஒரு சீனியர் லெப்டினன்ட்' டாக இருக்கிறேன். அதனுடைய அணி வகுப்பில் நான் இடம் பெற்றிருக்கிறேன். எனவே வெற்றியை அடையும் வரை நான் போராடிக் கொண்டிருப்பேன். இறுதிப்போர்வரை நாங்கள் எங்கள் 'அமைதியான' விருப்பங்களை ஒத்திப் போடத்தான் வேண்டும்... இல்லையா தோழரே!

'சோவியத் பெண்கள்' இதழில் வந்த ஒரு பேட்டிக்கட்டுரை.

குறிப்பு:

O லத்தீன் அமெரிக்க நாடுகளில், அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பையும் நவீன காலனிய ஆதிக்கத்தையும் எதிர்த்து மக்கள் புரட்சிகர யுத்தங்களில் ஈடுபட்டுள்ளார்கள். அவற்றுள் ஒன்று நிகராகுவா

O சாண்டினிஸ்டாக்கள்- புரட்சிப் போராளிகள் சோமசா- எதிர்புரட்சி அரசு. அதன் தலைவன்-பாஸ்டோரா.

நன்றி-மனஓசை

---



கொடூரமான இராணுவ நடவடிக்கைகளுடன் பொருளாதாரத் தடையுடன் கூடியதான பொருளாதாரத் தடையினை அமுல் நடத்தி வரும் சிங்கள அரசின் நடவடிக்கைகள் தமிழ் மக்களின் போராட்ட உணர்வினை மழுங்கடிக்கவில்லை.

மூன்றுமாதப் பொருளாதாரத் தடையை அவர்கள் சாய நம்பிக்கையுடன் எதிர்கொள்வதே இதற்கு அத்தாட்சி.

இத்தகைய அடக்கு முறைத் தந்திரோபாயங்களை எதிர்த்து பரவலாகி நடந்து வரும் எதிர்ப்பு ஊர்வலங்களில் ஒன்றில் இருந்து சில காட்சிகளை மேலே காணுகின்றீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நகரைப் பாழ் நகராக்கும் மினி - சினிக் கோலம்!

**மினி - அவதானி**

ரோம் சாம்ராச்சியம் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்தது. ஆயினும் அவ்வீழ்ச்சியினை மக்களுக்கு எடுத்துக் காட்டக் கூடாது என்பதற்காக ரோம ஆட்சியாளர்கள் நாடெங்கும் காணிவெல் களியாட்டங்களை உற்சாகப்படுத்தினர். அங்கு சிங்கத்துடன் அடிமைகளை சண்டையிட வைத்தனர். இன்னும் இப்படி எத்தனையோ ரசமான நிகழ்ச்சிகளை நடாத்தி முடித்தனர். இத்தனையும் அழிந்து வரும் ரோம ராச்சியத்தினை, மக்கள் பேசாது இருப்பதற்குத் திசை திருப்பப்பட்ட விடயங்களே.

அமெரிக்காவில் இன்று வீட்டுக்கு வீடு ரெலிவிஷனும், வீடியோவும் இருக்கின்றன. ஆனல் வீடியோவையோ, ரெலிவிஷனையோ பார்ப்பவர்களைப் பேயர்கள் என்றும், ரெலிவிஷனைப் பேயர் பெட்டி என்றும் கல்வியுலகம் அழைக்கின்றது. ஒரு குண்டூசி செய்ய முடியாத இந்த நாட்டிற்கு ரெலிவிஷனும், வீடியோவும் தொழில் நுட்பங்களை எடுத்துக் காட்டி நாம் கல்வியுலகில் முன்னேறி விடுவோம் எனச் சொல்வது வேடிக்கையானது. அப்படியாயின் இலங்கையரசாங்கம் ஏன் இவற்றை இறக்குமதி செய்கின்றது? தென்னிலங்கையிலே சிங்கள மக்கள் விலைவாசிக்கு எதிராகப் போராடாது இருக்கவும், தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் போராட்டத்தை மழுப்படிக்கவும் முதலாளித்துவ நலன்கட்காகவே இவை இறக்குமதி செய்யப்பட்டன. இப்பெட்டிகளால் தியேட்டர்கள் அழிந்து விட்டன. மூலைக்கு மூலை மினி சினிமாக்கள் ஆங்கில ஆபாசத் திரைப்படங்களைத் திரையிட்டுப் பாலியலைக் காட்டிப் பணத்தைப் பறிக்கின்றது. இன்பம் எங்கே இன்பம் எங்கே என்று தேடு, அது எங்கிருந்தாலும் அதை நாடி ஓடு எனச் சபலமுறும் வாலிபர்களும் யுவதிகளும் இங்கு சங்கமமாகி தமது நியாயமான உணர்வுகளை அழிக்கின்றனர்.

## முச்சந்தியில் பாலியல் விளம்பரங்கள்

நமக்கென ஒரு நாடு வேண்டும்; அதற்குப் போராடுவோம் எனப் போரிடும் போராளிகள் ஒருபுறம்; அவர்கள் இருக்கட்டும் எனச் சொல்லிவிட்டு அதிரடிப் படையைக் கொலை செய்யும் வெளிநாட்டுக் கெரில்லாக்களின் படங்களை மினி- சினிமா முதலாளிகள் திரையிட்டுப் பணம் உழைத்துக் கொள்கின்றனர். உண்மையில் இப்படங்களைத் திரையிடுவதனல் முதலாளிகள் எமது போராட்டம் விரிவடைய வேண்டும் என நினைக்கவில்லை, தமது பணப்பெட்டி நிரம்ப வேண்டும் என்பதே குறிக்கோள். இவ்வாறுன படங்கள் திரைபட்டுப் பணம் உழைப்பது போராளிகளின் ஆயுதத்தால் அவர்களையே திருப்பித் தாக்குவது என்றே சொல்லலாம்.

## தமிழ்ப் படங்கள் இல்லை

தமிழ் ஈழம், கலாசாரம், பண்பாட்டில் இந்நாட்டில் வித்தியாசமான ஒரு பகுதி. ஒரு நாள் கச்சேரியடிப் பக்கமாக ஒரு பிரான்சிய உல்லாசப் பயணியைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப் பெண்மணி எமது நாட்டின் கலாசாரப் பண்பாட்டை நன்கு ரசித்ததுமன்றி ஒழுக்கப் பண்பாடடில் தமிழ்மக்கள் உயர்ந்து நிற்பதை எண்ணி மூக்கின்மேல் விரலை வைத்தார்!

ஆனல் இன்று நடப்பது என்ன? போர்க்களத்தில் எதிரி நிற்கிறன் ஆனல் மினி சினிமாக்களோ காமக்களத்துக்கு வழிகாட்டுகின்றன. கொட்டடிப்பக்கமாக அடித்த ''ஷெல்'' லிற்கு மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தார்கள் அதேசமயத்தில் கே கே எஸ் றேட்டில் உள்ள ஒரு மினி சினிமாவின் விளம்பரத்தில் பின்வருமாறு போடப்பட்டு இருந்தது. ''ஒரு ஆண் தனது கொள்கையை மாற்றும் போது ஒரு பெண் தனது வாழ்க்கையை மாற்றிக் கொள்கின்றுள்'' இந்த வாக்கியங்கட்கு மேலே ஒரு பெண் தனது மேலாடையைக் கழட்டுவது போன்று போஸ்ரர் காணப்பட்டது. 'ஷெல்' அடியால் மக்கள் வீட்டுக்கு வீடு தாவி ஓடி மாறுவதோ ஒரு ஆணுக்காகப் பெண் தனது வாழ்வை ''அட்ஜஸ்ற்'' பண்ணுவதோ முக்கிய பிரச்சனை?

நகரத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட மினிசினிமா அரங்குகள் இருக்கின்றன. இருப்பினும் இந்த மினி அரங்குகளில் தமிழ்ப்படங்களைப் பார்ப்பது என்றல் சரடி பிறை கண்டது போலத்தான்!

## போக்கு வாவுச் சந்திகளில் பாலியல் போஸ்ரர்கள்!

யாழ் நகரத்தின் முக்கியமான சந்திகளில் பாலியல் போஸ்டர்கள் ஒட்டுவது தடை செய்யப்பட வேண்டும் உலகின் சகல மனிதர்களுமே சகலகுணம் கொண்டவர்கள் சந்திகளில் போஸ்ரர்கள் ஒட்டப்படுவதன் மூலம் விபத்துக்கள் அதிகம் நேரிடுகின்றன.

அமெரிக்காவில் விபத்துகட்கு இவ்வித போஸ்ரர்கள் பெரும் காரணம். தேர்தல் முடிந்த பின்பு அரசியல் போஸ்ரர்கள் கூட இருக்கப்படாது என சிங்கப்பூர் அரசு தடை செய்கின்றது இஸ்ரவேலில் வாகனங்கள் ஓடுபவர்கள் தமது குழந்தைகளின் படங்களை வாகனத்தின் முன்பக்கத்தில் ஒட்டவேணும். இந்த ஏற்பாடுகள் யாவும் விபத்தைத் தவிர்க்கவே! இங்கோ மூலை முடுக்கு எங்கும் சீர் கெட்ட பாலியல் போஸ்டர்களால் தடுமாறும் சாரதிகள் தம்மையும், பிரயாணிகளையும் மரணத்துக்குள் தள்ளுகின்றனர்!

## திகிலால் விளைந்த கேடு!

ஒரு அமெரிக்கக் குடும்பம் கிராமப் புறத்துக்குச் சுற்றுப் பயணம் செய்தனர். அவர்கள் ஒரு இரவு அக்கிராமத்தில் தங்கினர். திடீரென அக்குடும்பத்தின் மூத்த மகன் தனது பிஸ்ரலால் தனது, தந்தை, தாய், சகோதரி ஆகியோரைப் படுகொலை செய்தான் பொலிஸ் வந்தது. ஏன் இக்கொலைகளைச் செய்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அவனைப் பொலிஸ் வினவியது. எனக்கு ஆங்கிலப் படத்தில் வரும் 'திறில்' போன்ற நிகழ்வு தேவையாக இருந்தது, இதனால்தான் இக் கொலையைச் செய்தேன். என்றான் அவன். யாழ்நகர் மினி சினிமாக்களில் ஓடும் 'திறில்' படங்களும் கடைசியில் இவ்வாறான அழிவுகட்கே வழிகாட்டும்...

## ஓ யாழ்ப்பாணமே!

இன்று ஈழத்தின் இருதயமான யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல சமுதாயச் சீர்கேடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. வாயாலோ அல்லது எழுத்தாலோ தெரிவிக்க முடியாத பல சமுதாயச் சீர்கேடுகளில் எமது ஒலி ஒளிபரப்பு சேவைகளின் சீர்கேடு அருவருக்கத்தக்கது. மக்களிடம் ஏற்பட்டுள்ள விழிப்பை மழுங்கடிக்கக் கூடியதாகவும், மக்கள் மத்தியில் முளைவிட்டு மெல்ல வளர்ந்து வரும் போராட்ட எண்ணங்களை சிதைக்கக் கூடியதாகவும் இச் சீர்கேடு அமைந்துள்ளது. யாழ். குடா நாட்டில் மினிசினிமாக்கள், தனியார் தொலைக்காட்சி சேவை இவ்விரண்டாலும் எமது சமுதாயம் கெட்டழிந்து போகிறது என்பது உண்மையை அறிந்துள்ளவர்களுக்கு தெரிந்ததே இந்த் சீர்கேடுகளை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அதற்கான பல நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒலி ஒளி பரப்பு கட்டுப்பாட்டுச் சேவையினர் கொணர்ந்தது. உண்மையிலேயே போற்றத்தக்க விடயந்தான்.

இந்த கொடூரமான சமுதாயச் சீர்கேட்டினால் எமது கலை கலாசாரம் போன்றவை மட்டுமல்ல மாணவ மாணவியரின் கல்வி நிலையும் பாதிப்படைகின்றது. இது தவிர உளவியல் ரீதியில் சிறுவர்களில் இருந்து பெரியோர் வரை தாக்கத்துக்குள்ளாகின்றனர் முக்கியமாக பணம் சம்பாதிக்கும் நோக்குடன் சில சுய இலாபம் தேடுபவர்கள் சமுதாயத்தை சீரழிப்பதற்கென்றே இப்படிப்பட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக இந்தியாவில் முக்கியமாக தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்டு வெளிவரும் திரைப் படங்கள் பெண் அடிமைத்தனத்தை ஊக்குவிப்பதற்கும். இளைஞர்களிடையே முற்போக்கு எண்ணங்களை அழிப்பதற்காகவும் தான் குறுகிய நோக்குள்ள சினிமாக்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன இதற்காக இந்திய திரைப்பட தணிக்கைக் குழுவும் ஆதரவு அளிப்பதாக தங்கள் கத்தரிக்கோல் விளையாட்டில் ஆழத்தை ஏற்படுத்தாமல் இருந்து விடுகிறது.

## தலைகுனிய வேண்டிய நிலை

இன்று தமிழீழத்திலும் சிலர் மக்கள் மத்தியில் இப்படிப்பட்ட நாசகார வேலைகளை மேற்கொண்டு நல்லெண்ணங்களுக்கும், சமுதாய சீர் திருத்தங்களுக்கும் அழிவை ஏற்படுத்தி வருகின்றனர். யாழ்ப்பாண நகரத் தெருக்களில் நடந்து போனால் நாம் தலை குனிந்து கொண்டு போக வேண்டிய நிலையாக இருக்கிறது. ஆம்; வீதியில் எங்கும் பெண்களின் துயிலுரிந்த போஸ்ரர்கள், மற்றும் ஆபாசமான வரவேற்புக்கள். இந்திய தமிழ்ப்பட ஆபாச நடிகைகளான டிஸ்கோ சாந்தி, அனுராதா போன்றவர்களின் சினிமாக்களைப் பார்த்து ரசிக்காமல் இங்கே சிலரால் இருக்கமுடியாமல் இருக்கிறது. இதை எண்ணும் போது நாம் வெட்கப்படத்தான் வேண்டும்.

## திட்டமிட்ட மதுச்சாலைகள்

மினி சினிமாக்கள் அமைந்துள்ள பல இடங்களில் மதுச்சாலைகளும் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகிறது. இன்றைய நிலையில் எமக்கு இப்படிப்பட்ட கீழ்த்தரமான செயல்பாடுகள் தேவைதானா என்று ஓங்கிக் கதத் வேண்டும்போல் இருக்கிறது. பெண்களை வியாபாரப் பொருள்களாக வைத்து எடுக்கப்படும் பல தமிழ் படங்கள், பெண்களை கொச்சைப் படுத்துவதாகவும், அவர்களின் சுதந்திரத்தை தடை செய்வதாகவும் இருக்கின்றன. எமக்கு எமது தேசம் எவ்வளவு முக்கியமோ, அதேபோல் எமது கல்வி வளர்ச்சியும் எமக்கு முக்கியமே.

இன்று பல வீடுகளில் சிறிய குழந்தைகள் மாலை ஆறு மணியானதும் தனியார் தொலைக்காட்சி சேவையினை இரசிப்பதற்காக தொலைக்காட்சியின்முன் உட்கார்ந்து விடுகிறார்கள்.

## குழந்தைகள் மனோநிலை

சிறுவர்கள், மனதில் இதனால், அநாகரிகமான எண்ணங்கள் படிய நேரிடுகிறது. பின்பு நாம் விடுதலையடைய வேண்டுமென்ற சிந்தனையோ அல்லது நமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டுமென்கின்ற கொள்கையோ செத்தழிந்து போகின்றது.

பல சினிமாக்களில் இடம்பெறும் ஆபாசமான வசனங்களும், பாலியல் தொடர்புள்ள அருவருப்பான காட்சியும் எம்மை நாளடைவில் இருட்டான பகுதியில் கொண்டுபோய் புதைத்து விடுவது உறுதி.

## விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடு

இந்த இக்கட்டான நிலையிலிருந்து எம்மை மீட்பதற்காகத்தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒலி ஒளிபரப்பு கட்டுப்பாட்டு அமைப்பினர் இன்று முன் வந்துள்ளனர். யாழ். குடாநாட்டில் நாற்பத்தாறு தனியார் தொலைக்காட்சி சேவைகள் தற்போது இயங்கிவருகின்றன. மினிசினிமாக்கள் எழுபத்தியொன்று என்று அண்மைக்கால கணக்கெடுப்பின் மூலம் தெரிய வருகிறது.

இப்போது சேவையில் ஈடுபட்டுள்ள அத்தனை நிறுவனங்களுக்கும் இந்த ஒலி ஒளிபரப்பு கட்டுப்பாட்டு அமைப்பினால் உத்தரவுப் பத்திரங்கள் கையளிக்கப் பட்டு வருகின்றன.

தனியார் தொலைக்காட்சி சேவையினர் திரைப் படங்களையும் மற்றும் இதர காட்சிகளை ஒளிபரப்புவதற்கு நேர சூசியும் அறிவிக்கப்பட இருக்கிறது.

அயல் நாடுகளில் இருந்து இங்கு தருவிக்கப்படும் அத்தனை வீடியோக் கொப்பிகளும் மேற்படி அமைப்பினால் தணிக்கை செய்யப்பட இருக்கிறது. கட்டுப்பாடு இல்லாத இடத்தில்தான் ஒழுங்கும் இல்லாது இருக்கும் கட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டால் ஒழுங்கும் தானாக ஏற்படும்.

ஒலி ஒளிபரப்பு கட்டுப்பாட்டு அமைப்பின் இப் பணியினை நாம் பாராட்டத்தான் வேண்டும்.

தற்போது இருக்கும் இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானால், பின்பு எமது தாயகத்திலேயே எமது பெண்களையும், ஆண்களையும் கொண்டுவித்தே நீலப்படங்கள் என்று சொல்லப்படும் ஆபாசப் படங்கள் உருவாக்கப்படுவதும் தவிர்க்கமுடியாமல் போய்விடும்.

எமக்கு இப்போது தேவை விடுதலை. விடுதலைக்குப் பாதகமான எந்த செயல்பாடுகளையும் நாம் ஆதரிப்பது எமது தேசத்துக்குச் செய்யும் துரோகத்தனமாகும்.

நாம் ஒவ்வொருவரும் சுதந்திரமாகச் சுவாசிக்க வேண்டிய வழியை நாடவேண்டும். அதற்காக போராட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள்

தேவைகளை நிறைவேற்ற

எம்மை நாடுங்கள்...

- விவசாய கிருமிநாசினிகள்...
- உரவகைகள்...
- நவதானியங்கள்...
- பலசரக்கு வகைகள்...
- சாய்ப்புச்சாமான்கள்...

அனைத்திற்கும்

சிறந்த ஒரே இடம்

# திருநாவுக்கரசு அன் சன்ஸ்

பலாலிவீதி கோண்டாவில் — தொலைபேசி: 24315

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Institute of Engineering Technology

9/1, STANLEY ROAD, JAFFNA.

## 12 வருடகால அனுபவமுள்ள ஸ்தாபனம்

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைப்பெற்றுவந்த ஆசிரியர்கள் மூலம் வெளிநாட்டு தொழில்நுட்பத்திற்கு ஏற்ப வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் தொழில்வாய்ப்பைப்பெறக் கூடியதாக பயிற்சிகள் நடாத்தப்படுகின்றன.

### பயிற்சிகள்

| | |
|---|---|
| மோட்டார் சைக்கிள் பொறியியல் | Motor Cycle Mechanism |
| மின் இணைப்பு | Electrical Wiring |
| வாகன மின் இணைப்பு | Auto Wiring |
| ஒட்டுதல் | Welding |
| படம் வரைஞர் | Draughtsmanship |
| வானொலி, தொலைக்காட்டி | Radio, T.V |
| வைண்டிங் | Winding |
| ஆங்கிலம் | English |
| தட்டச்சு | Typing |

✶ சிறந்த விரிவான செய்முறைப் பயிற்சி ஒவ்வொரு மாணவர்கட்கும் தனித்தனி யாக சிறந்த ஆய்வு கூடத்தில் அளிக்கப்படுகின்றன.

✶ பயிற்சி முடிவின்பின் மாணவர்கள் விரும்பின் இலவசமாக செய்முறை பயிற்சி அளிக்கப்படுகின்றன.

✶ வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு கிடைக்கும் காலங்களில் எமது நிலைய மாணவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படுகின்றன.

விபரங்கட்கு:

Institute of Engineering Technology

K. K. S. ROAD, CHUNNAKAM.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை - அலுவலக
உபகரணங்கள் - பேப்பர் வகைகள்
மொத்தமாகவும் - சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள யாழ் நகரில்
புகழ் பெற்ற ஸ்தாபனம்

# இஸ்மாயில்ஜீ அமிஜி

ஸ்ரேசனர்ஸ்

● தேசிய கடதாசி ச[illegible]ந்தாபனத்தின்
அங்கீகாரம் பெற்ற வியாபாரிகள் ●

தொலைபேசி: 22166

580, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

*Wholesale and Retail Stationers....*
*School and Office Stationery Suppliers....*

Approved Dealer.
FOR NATIONAL PAPER CORPORATION

# ESMAILJEE AMIJEE
# STATIONERS

580 HOSPITAL ROAD
JAFFNA
T. Phone - 22166


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org